அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி


ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை

துர்முகி ❂ மாசி (பிப்ரவரி – 2017) விலை: ரூ.10/–


முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்


1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் பத்ரகிரியார் ஆசி நூல் ........ 11
4. 07.06.1998 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை பக்தியே வினையை வெல்லும் உபாயம்** ........ 18
5. தைப்பூசம் மற்றும் தை மாத பௌர்ணமி பூஜை ........ 48
6. மாசி மாத பௌர்ணமி பூஜை ........ 48
7. அன்பர்களின் அனுபவங்கள் ........ 49
8. பருவ மழை பெய்ய உபாயம் – மகான் வரதரிஷி ஆசி நூல் ........ 51
9. தமிழகத்தின் எதிர்காலம் – மகான் முருகப்பெருமான் ஆசி நூல் ........ 55
10. ஆத்திசூடி – குருநாதர் அருளுரை தொடர் ........ 61
11. ஓங்காரக்குடில் செல்லும் வழித்தடம் ........ 65
12. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 73


ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி காலை 11 மணி மற்றும் மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

முருகனே இந்த கலியுகத்தில்
மேலான உன் அருள் பலத்தை
ஆறுமுக அரங்க ஞானி வடிவில்
அறபலமாக்கி அவதாரம் நிகழ்த்தி

நிகழ்த்தியே சேவை ஆற்றி வருக
நின்னை கண்ட சித்த பெருமக்களும்
செகத்தில் மக்களும் அறிந்து தெளிந்து
சித்தி காணவே ஆசி அருளி வருகின்றோம்

வருகவே ஆறுமுக அரங்கனுன்
வல்லமையான அவதாரம் அறியவே
ஆறுமுகன் உன் அருள்பட வரும்
ஆற்றலான ஞானத்திருவடி நூலுக்கு

**மகான் பத்ரகிரியார் ஆசிநூல்**

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 40 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைக்கொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான "**ஞானயுகம்**" அமைகின்றதை!

அன்புடன் – இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | துர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# மாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு மகான் பத்ரகிரியார் அருளிய ஆசிநூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் : **99655 71837**

1. நாத யோக எங்கள் நாயகனே
ஞான மகா சூட்சும பாலகனே
வேத யோக உயர் நெறிமுறையை
வேலுடன் மயிலேறி வந்தருளும் முருகனே

2. முருகனே முக்கண்ணார் புதல்வனே
மூலக்கனலே ஞான முழுப்பொருளே
வருவாய் அருள்வாய் வடிவேலா என
வையகமே கூவி அழைக்கும் தடமெல்லாம்

3. தடமெல்லாம் தயவுபட இறங்கி
தகதகவென ஆயிரமாயிரம் ஒளி
சுடராய் வெளிப்பட்டு அருளும்
சுப்பிரமணியனே சூட்சும சூரனே

4. சூரபத்துமம் புரிந்த செந்தூரனே
சிங்காரனே சிக்கல் தீர்க்கும் வேலனே
ஆரவாரமான அடியவர் பக்திக்கும்
அமைதிபட நடக்கும் தவசித்திக்கும்

5. சித்திக்கும் சீக்கிரமாய் இறங்கி
சேவை ஆற்றும் உமையின் பாலகனே
சத்தியனே சரவணப் பொய்கை நாதனே
சடாட்சரனே சண்முகநாதனே ஐயனே

6. ஐயனே உன் நாமங்கள் சொல்ல
அருளாய் ஆற்றலாய் நாவினில்
மெய்யுணர்வு காட்டி ஞானத்தினை
மொழிகளாய் வரிகளாய் அருளும் சுப்பனே

7. சுப்பனே எல்லா யுகங்களிலும்
சூரனாய் பல சூட்சும வரங்கள்
தப்பில்லா வழங்கி காத்தருளி
தவசி பலரை உருவாக்கிய முருகனே

8. முருகனே இந்த கலியுகத்தில்
மேலான உன் அருள் பலத்தை
ஆறுமுக அரங்க ஞானி வடிவில்
அறபலமாக்கி அவதாரம் நிகழ்த்தி

9. நிகழ்த்தியே சேவை ஆற்றி வருக
நின்னை கண்ட சித்த பெருமக்களும்
செகத்தில் மக்களும் அறிந்து தெளிந்து
சித்தி காணவே ஆசி அருளி வருகின்றோம்

10. வருகவே ஆறுமுக அரங்கனுன்
வல்லமையான அவதாரம் அறியவே
ஆறுமுகன் உன் அருள்பட வரும்
ஆற்றலான ஞானத்திருவடி நூலுக்கு

11. நூலுக்கு துர்முகி தேள் திங்களில் (துர்முகி வருடம் கார்த்திகை மாதம்)
நிலமதனில் பத்ரகிரியார் யானும்
ஞானமுடன் ஆசிதனை உரைப்பேன்
ஞான உலகம் அமைக்க வேண்டி

12. வேண்டி வேண்டி விழாக்களை
வேலவனே கலியுகத்தில் நடத்த
அண்டிட உலகோர் அரங்கனை
அருள் ஞானம் மிகுதி அடைவரென்பேன்

13. என்பேன் **கலியிடர்கள் ஆன**
**ஏமாற்று வஞ்சம் பொய் புரட்டு**
**துன்பமான பதவி பொருளாசை**
**தூங்கவிடா பணம் சொத்து வழி**

14. **வழிகளான தன்னலப் பற்று**
**வளமறுக்கும் ஊழல் களவு சிந்தை**
**பழிவாங்கும் உயிர்க்கொலை வதை**
**பாவச் செயல்கள் எல்லாவற்றிலும் இருந்து**

15. இருந்து மீள வேண்டுமா மக்களே
இனியும் தாமதம் கொள்ளா
அருந்தவசியாக வந்துள்ள அவதார
ஆறுமுக அரங்கனை கண்டு வணங்கி

16. வணங்கியே **வழிகாட்டு முருகா**
**வல்லமையூட்டு நல்வழிகட்கு** என
இணங்கி சரணடைவு கொள்ள
எல்லாவித இடர்களும் நெருங்கா

17. நெருங்கா நெருப்பு வளையம் போல்
ஞானதேசிகன் அருள் பலமும்
நெருங்கவிடா காத்து மீட்கும்
ஞானவழியில் நெடிய பயணமும்

18. பயணமுடன் நீண்ட ஆயுளும்
பணிபவர்க்கு பாதுகாப்பு பலமும்
தயவு பெருக்கி ஞான உலகினில்
தானவர்கள் வாழவும் செய்யும்

19. செய்யுமே கலியுக மக்களுள்
சிறப்பறிவு உள்ள மக்களாக்கி
அய்யன் முருகனை அடையாளம் கண்ட
அருட்சீடர்களாக்கி வாழ வைக்கும்

20. வைக்குமே மறுமை போக்கி (மீண்டும் பிறவா வரம் தந்து)
வரமீந்து மேலும் மேலும் அவர்களை
ஊக்குவித்து உலக மக்களிடை
உயர்வான ஓங்காரம் பாடிட வைத்து

21. வைத்துமே இந்த கலியுகமே
வடிவேலனின் பூரண நாமசெபத்தால்
உத்தம சத்திய சக்திமிகு ஞான
உயர் ஞான உலகமாக்கி சிறக்கும்

22. **சிறக்கவே ஆறுமுகப் பெருமானே**
**சேவகனாய் கலியுக மாற்றத்துக்கு**
**மறை போற்றும் வண்ணம் அரங்கனை**
**மாதருமம் செய்ய வைத்து இறங்கி இருக்க**

23. **இருக்கவே கலிகால மக்களே**
**ஏற்காமல் உயர்வுக்கு வழியில்லை**
**வருத்தங்கள் போக வகையுமில்லை**
**வழங்கினேன் காப்பு கருதி பத்ரகிரி யானும்**

24. **ஞானம் கூட நியாயம் பிறக்கும்**
**ஞானம் கூட நாடும் சிறக்கும்**
**ஞானம் கூட நல்ல தலைமை கிடைக்கும்**
**ஞானம் கூட நல்லதே நடக்கும்**

25. நடத்தவே ஆறுமுகன் அருளாய்
ஞான வழிகாட்டலாக பலவழியில்
தடையற இறங்கி செயல்பட
தருமவழியே உயர்ந்த வழியாய் இருக்க

26. இருக்கவே ஆறுமுக அரங்கனின்
எல்லா செயல்களிலும் மக்கள்
கருத்தாக வந்து கலந்து இணைந்து
கடமையாக சேவை ஆற்றிட வருகயென

27. வருகை புரிந்து வளங்கள் பெற
வையகம் மாற வளங்கொழிக்க
ஆறுமுகனின் ஞானத்திருவடி நூலில்
ஆசியாக அருளி நின்றேன்

28. நின்றபடி ஞானத்தகவலாய்
நிலவுலகை மாற்ற வழிநடத்த
நன்றான வழிகாட்டியாக வரும்
ஞானத்திருவடி நூலை பெற்று வாசிக்க

29. வாசிக்க வாழ்வினில் பூஜிக்க
வடிவேலனின் நாம செபமுடன்
ஆசிபெற அறத்தை தொடர
அவரவருள்ளும் அருள்தயவு பெருகி பெருகி

30. பெருகியே ஞானத்திறவு கிட்டும்
பேறு காணும் தசவாசல் திறக்கும்
முருகனருளால் இந்த முழுமை கிட்டும்
மொழிந்திட்ட பத்ரகிரி என் ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் பத்ரகிரியார் ஞானத்திருவடி நூலிற்கு அருளிய ஆசி நூலின் சாரம் :

நாத யோகத்தின் தலைவனே எங்கள் நாயகனே ஞான மகா சூட்சும பாலகனே வேத யோகங்களின் உயர்நெறிமுறைகளை உலகிற்கு வேலுடன் மயிலேறி வந்து அருள் செய்து காக்கின்ற முருகப்பெருமானே, வேலவனே ஞானபண்டிதனே முக்கண்ணார் புதல்வனே மூலக்கனலே, மூலக்கனலின் மூலநாயகனே, ஞானமே, ஞானத்தின் முழுப்பொருளே, உருவாயும், அரூபமாயும் விளங்கி நிற்கும் மகா தெய்வமே “வருவாய் அருள்வாய் வடிவேலா” என்று உலகினில் எந்த இடத்திலிருந்தும் யார் மனம் உருகி அழைத்திட்டாலும் அழைத்தவர் எவராயினும், எந்த நாட்டவராயினும், எந்த மதத்தினராயும் இருந்தாலும் சரி அவர்க்கும் அளவிலாத தயவு காட்டி தயவுடன் கருணையோடு அவர் தமக்கும் இறங்கி இதம் புரிந்து “**தகதகவென ஆயிரம் ஆயிரம் சூரியர்கள் ஒன்று கூடியதைப் போல பேரொளிச் சுடராய் தங்கமயமாய் வெளிப்பட்டு அருள் செய்யும் சுப்பிரமணியனே**” சூட்சும சூரனே, சூரனை

வதம் செய்து உலகை காக்க திருச்செந்தூர் வேலனே சிக்கல்களை தீர்த்து அருள் செய்யும் சிங்காரவேலனே. ஆரவாரத்துடன் உம்மை வழிபடும் அடியவர்கள் பக்திக்கும், அமைதியுடன் மனதினுள்ளே உம்மை நிறுத்தி வழிபட்டு தவம் செய்து நடக்கும் தவசித்திக்கும், சித்திகளை அளிக்க சீக்கிரமாய் இறங்கி அவர்தமக்கு தொண்டுகள் செய்து சேவையாற்றும் உமை பாலகனே, சத்தியத்தின் சொரூபமே சத்தியனே, சரவணப் பொய்கை நாதனே ஆறெழுத்து மந்திரமாம் சரவண பவ எனும் சடாட்சரத்தை உடைய சடாட்சரனே சண்முகநாதனே எங்கள் கடவுளே இறைவனே ஐயனே அற்புதமான உமது நாமங்களை சொல்ல சொல்ல சொல்ல அருளாய், ஆற்றலாய் சொல்பவர் நாவினில் மெய்யுணர்வு காட்டி ஞானத்தினை மொழிகளாய் வரிகளாய் அருளும் அப்பனுக்கே பாடம் சொன்ன பண்டிதனே சுப்பனே.

எல்லா யுகங்களிலும் ஆற்றல் மிகப் பொருந்தியவனாய் சூராதிசூரனாய் விளங்கி பல சூட்சும வரங்களை குறையேதும் இன்றி அன்பர்க்கு வழங்கி காத்தருளி தவசிகள் பலரை உருவாக்கிய முருகப்பெருமானே, ஞானபண்டிதனே அருளாளா, இந்த கலியுகத்தில் மேலான உமது அருள்பலத்தை ஆறுமுக அரங்கமகாதேசிகனார் வடிவினில் அற பலமாக மாற்றி இவ்வுலகம் காத்திட கலியுகம் மாற்றி ஞானயுகம் அமைத்திட முருகா தாமே அவதாரம்தனை அரங்கன் வடிவினில் நிகழ்த்தி சேவைகள் பலவாறாய் உலகிற்கு ஆற்றி வரவர, உம்மைக் கண்ட சித்த பெருமக்களும் உலக மக்களும் உம்மை உள்ளவாறு அறிந்து தெளிந்து சித்தி காணவே ஞானிகள் நாங்களெல்லாம் பலவாறாய் பலவிதமாய் உலக மக்களுக்கும் உமக்கும் ஆசி அருளி வருகின்றோமப்பா. அரங்கன் வடிவினில் உள்ள முருகா உம்மை பலவிதங்களில் ஞானிகள் நாங்கள் உலகினில் வெளிப்படுத்தி நிற்கின்றோமப்பா.

முருகனின் அவதாரமே அரங்க முருகா ஆறுமுக அரங்கமகாதேசிகனே உமது வல்லமையான அவதாரத்தை உலகோர் அறியவே ஆறுமுகப் பெருமானே உமது அருள்பட வெளிவரும் ஆற்றல்மிக்க ஞானத்திருவடி நூலிற்கு துர்முகி வருடம் கார்த்திகை மாதம்தனிலே பத்ரகிரியார் யானும் ஆசி நூல் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பத்ரகிரியார்.

இவ்வுலகினில் ஞான உலகம் அமைக்க வேண்டியே விழாக்களை முருகப்பெருமானே முன்னின்று நடத்திட உலக மக்கள் அரங்கனை நாடி வந்து கண்டு தரிசித்து அருள் பெற்று, அருள் ஞானம்தனை மிகுதியாக அடைந்து சிறப்பார்கள் என்பேனப்பா.

**கலியுகத்தின் கொடுமைகளான ஏமாற்றுதல், வஞ்சனை செய்தல், பொய் சொல்லுதல், சொன்ன வாக்கை மீறி மாற்றி பேசி புரட்டு வேலைகள் செய்தல், துன்பம்மிக்கதான பதவி ஆசை, பொருளாசை, மனிதனை தூங்கவிடாமல் செய்கின்ற வகையில் உண்டான பணப்பிரச்சனைகள், சொத்துகள் வழியிலான பிரச்சனைகள், பேராசை, தன்னலம்மிக்க செயல்கள் வளங்களை எல்லாம் அழிக்கும் ஊழல் செயல்கள், பிறர் பொருளை**

**பேராசையால் கவர்ந்து கொள்ளும் களவு செயல், களவு செய்ய சிந்தித்தல், பிறர் தம்மை வஞ்சித்து துன்புறுத்துவதான பழிவாங்கும் செயல்கள், உயிர்கள்பால் இரக்கம் இல்லாமல் செய்யும் உயிர்க்கொலையும், கருணையே இல்லாத உயிர்வதையும், இன்னும் உள்ள அநேகம் அநேகம் பாவச்செயல்கள் எல்லாவற்றிலும் இருந்து மீண்டு நல்வாழ்வு வாழ வேண்டுமாயின் உலக மக்களே இனியும் ஒரு துளியும் தாமதம் கொள்ளாமல் உடன் விரைந்து வாருங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.**

**எல்லையில்லா தவமும், தானமும், யோகமும் செய்து எல்லையில்லாத புண்ணிய பலமும், அருள் பலமும், தவபலமும், யோகபலமும் பெற்று இன்று இவ்வுலகையே தமது தவதர்மபலத்தால் காக்கும் அருந்தவசி, அவதார மகா ஞானி ஆறுமுக அரங்கமகாதேசிகனை மனதார நம்பிக்கையோடு பயபக்தியுடன் பணிந்து வணங்கி வழிகாட்டு முருகா, எங்களுக்கு வல்லமையூட்டு முருகா, நல்வழிகாட்டு முருகா** என இணங்கி அரங்கன் திருவடிகளிலே சரணடைவு கொண்டிட்டால் எந்தவிதமான இடர்களும் உங்களை நெருங்காதப்பா.

ஆறுமுக அரங்கனின் தவப்பயனும், தர்மபலமும், முருகப்பெருமானின் அருள்பலமும், ஞானிகளின் அருளாசிகளும் ஒன்றிணைத்து அன்பர் தம்மை எந்த இடர்களும், நெருங்காமல் நெருப்பு வளையம் போல் சுற்றி நின்று அன்பரை காக்குமப்பா. ஞானதேசிகன் அரங்கனின் அருள்பலமும் எந்த ஒன்றையும் நெருங்க விடாது காத்து மீட்குமப்பா. மிக நீண்ட நெடிய பயணமான ஞானவழிதனிலே ஞான வழிபயணம் முழுதும் துணையாய் வருவதுடன் நீண்ட ஆயுளையும், பாதுகாப்பு பலமும் தயவினையும் பெருக்கி ஞான உலகினில் அவர்கள் இடம் பெற்று வாழ வழிவகையும் செய்யுமப்பா.

கலியுக மக்களுள் சிறப்பறிவு பெற்ற மக்களாக ஆக்கி முருகப்பெருமானை கண்டு கொண்ட அருட்சீடர்களாக்கி அற்புதமாய் வாழ வைக்கும், தொடர் பிறவியை தரும் மறுபிறவித் துன்பத்தை போக்கி, அவர்களுக்கு மறுமை போக்கும் வரத்தினை பெற்றுத் தந்து மேலும் மேலும் அவர்களை ஊக்குவித்து உலக மக்களிடையே உயர்வான முருகப்பெருமானின் பெருமைகளை சொல்லவைத்து இந்த கலியுகமே முருகப்பெருமானின், நாமஜெபத்தினால் முழுமையான பக்தியினால் உத்தம சக்திமிக்கதான சக்திமிகு ஞானஉலகமாக உயர் ஞான உலகமாக்கி சிறப்படைந்திட செய்யுமப்பா.

உலகம் மாறி ஞானஉலகமாக ஆகி சிறப்படையவே எல்லையில்லா ஆற்றலும் அருளும் கொண்ட முழுமுதற் கடவுள் ஆதி ஞானத்தலைவன் முருகப்பெருமானே அவதாரமாய் மக்களுக்கு தொண்டுகள் செய்யும் எளிய சேவகனாய் கலியுக மாற்றம் செய்திட வேதங்களெல்லாம் போற்றி புகழும் வண்ணமாக அரங்கமகாதேசிகனாக அவதரித்து இவ்வுலகினில் அரங்கனை அளவிலாத பெரும் தர்மங்களை செய்ய வைத்து இவ்வுலகினில் இறங்கி இருக்கின்றாரப்பா.

**ஆதலினால் கலிகால மக்களே அரங்கனை, முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்காமல், உங்கள் உயர்வுக்கு வழி ஏதும் இல்லையப்பா. உங்களுக்கு உண்டான துன்பங்கள் தமை போக்கிடவும், எந்த ஒரு வழிவகையும் இல்லையப்பா. நீங்கள் உணர்ந்து பாதுகாப்பை பெற்றிட உங்களது நலனிற்காக உண்மை உரைத்திட்டேன் பத்ரகிரி யானுமே.**

**ஞானம் கூடிட நியாயம் பிறக்கும்**
**ஞானம் கூடிட நாடும் சிறக்கும்**
**ஞானம் கூடிட நல்ல தலைமை நாட்டில் உண்டாகும்**
**ஞானம் கூடிட நல்லதே நடக்குமப்பா.**

**இவ்வுலகினில் தீமை மாறி நல்லதே நடந்திடவும், நல்ல செயல்களை நடத்திடவும் முருகப்பெருமானின் அருளாய் ஞான வழி காட்டலாய் பல வழிகளில் இறங்கி செயல்பட அவற்றினுள் தருமத்தின் வழியே உயர்ந்த வழியாய் இருக்க அத்தகைய தருமத்தின் வழிதனை உலகினில் நடத்தி உலகைக் காக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் எல்லா செயல்களிலும் மக்கள் கருத்துடன் வந்து கலந்து இணைந்து ஆறுமுக அரங்கமகாதேசிகனார் ஆற்றும் தானதருமப் பணிகளிலே கடமையாக தொண்டுகளை செய்து வந்திடல் வேண்டுமப்பா.**

**அரங்கனை நாடி வந்து தொண்டுகளைச் செய்து ஆசி பெற்று வளங்களை பெறவும் உலகம் மாறி வளம் கொழிக்கவும், ஞான செய்திகளை தாங்கி வருகின்ற முருகப்பெருமானின் ஞானத்திருவடி நூலில் பத்ரகிரி யானும் ஆசி நூல் வாயிலாக அருள் செய்து நிற்கின்றேனப்பா.**

**ஞானத்தகவல்களாய் அளித்து இவ்வுலகை மாற்ற இவ்வுலகை வழிநடத்த அற்புதமான வழிகாட்டியாக வருகின்ற ஞானத்திருவடி நூலினை அவரவரும் பயபக்தியுடன் பெற்று பூஜையில் வைத்து பூஜித்து வாசிக்க வாழ்வினில் முருகப்பெருமானின் நாமங்களை ஜெபித்து தானதருமங்களை தொடர்ந்து செய்தும் வரவர, அவரவருள்ளும் அருள் தயவு பெருகி பெருகி ஞானத்தெளிவும் ஞானத்திறவும் உண்டாகுமப்பா, வீடுபேறும் காணுமப்பா, தசவாசலாகிய பத்தாம் வாசல் எனப்படும் சுழிமுனையும் திறக்குமப்பா. முருகப்பெருமானால் இந்தவிதமான முழுமையான ஞானவாழ்வும் கிடைத்திடுமப்பா** என மகான் பத்ரகிரியார் தமது ஞானத்திருவடி ஆசி நூல் மூலம் உலகறிய ஞானத்திருவடி நூலின் பெருமையும், அரங்கன் பெருமையும், முருகப்பெருமான் பெருமையும் உரைக்கின்றார்.

–சுபம்–

புரிசடையோன் மைந்தன் பூவுலகை ஆண்டிட
வரிசுமை இலா வையகம் செழிக்குமே.

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம், ஓங்காரக்குடிலில்

**பக்தியே வினையை வெல்லும் உபாயம்**

என்ற தலைப்பில் 07.06.1998 அன்று அருளிய

# அருளுரை

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

வினையை அகற்றினால் விவேகம் வரும். விவேகம் என்பது அறிவு. வினை என்பது சின்ன விஷயமல்ல. அது ஒரு புரியாத புதிர்.

**ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.**

**– திருக்குறள் – ஊழ் – குறள் எண் 380.**

முன்பு செய்த வினைகள் நல்வினையாகவும், தீயவினையாகவும் இருக்கும். அவரவர்கள் செய்கின்ற வினைகள், அவரவர்களை சார்ந்தவர்களின் தன்மையைப் பொறுத்தே இருக்கும். சான்றோர்களிடம் நட்பு கொண்டிருந்தால், நல்வினையை பெருக்கிக் கொள்ளலாம்.

தீயவர்களோடு நட்பாய் இருந்தால், தீயவினையைப் பெருக்கிக் கொள்வான். தீயவினையைப் பெருக்கிக் கொள்வது என்பது மிகுந்த பாவம்தான்.

சான்றோர்களின் துணையிருந்தால் அன்னதானம் செய்வார்கள், தலைவனை புரிந்து பூஜை செய்வார்கள், அறப்பணி செய்வார்கள், பாவம் செய்வதற்கு அஞ்சி நடப்பார்கள். ஆனால் அதே சமயத்தில் ஒருசிலர் தீமைக்கு அஞ்ச மாட்டான். காரணம் இவனுடைய பழக்க வழக்கங்கள்.

இவனுடைய வினை, சார்ந்திருப்பவர்களின் தன்மையைக் கொண்டே அமையும். முன் செய்த வினை, எப்படிப்பட்டது என்பது நமக்குத் தெரியாதல்லவா? ஆகவே, அந்த வினையைப் பற்றி அறிவதற்கு இந்த ஜென்மத்தில் புண்ணியவான்களை சார்ந்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், போகும் பாதை சரியா? தவறா? என்று இவனுக்குத் தெரியாது. அவன் இஷ்டத்துக்கு செல்வான். மேலும் தீயவினையை செய்து கொண்டே இருப்பான். இதை மகான் வள்ளுவப்பெருமான் சொல்கிறார்,

**ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.**

**– திருக்குறள் – பேதைமை – குறள் எண் 835.**

என்ன இவ்வளவு அழுத்தம் கொடுக்கிறீர்கள்? ஏன் வலியுறுத்தி சொல்கிறீர்கள்? என்று கேட்டான்.

ஒரு ஜென்மத்தில் ஒருவன் அறியாமையின் காரணமாக தேடிக்கொண்ட பாவங்கள், ஏழு ஜென்மத்திற்கும் தேவையான நரகத்தை அவனுக்குத் தரும். ஆகவே இதை வலியுறுத்தி சொல்கிறோம் என்று மகான் திருவள்ளுவர் சொன்னார்.

ஒருமை – ஒரு பிறப்பில்,

செயலாற்றும் – செயல்படுகின்ற,

பேதை – அறியாமை உள்ளவன்.

ஏழு ஜென்மத்திற்குத் தேவையான நரகத்தில் சென்று சிக்கிக்கொள்வான். இது அவனுடைய வினைப்பயன். அவனுக்கு அறிவு வேலை செய்யவில்லை. இது சான்றோர்கள், பெரியோர்கள் துணை இல்லாததனால் வந்த கேடு.

அதே சமயத்தில் பாவிகளுடைய தொடர்பு இருந்தால்? கேட்க வேண்டியதில்லை. அதுவும் ஏழு ஜென்மத்திற்கும் தேவையான நரகத்தைக் கொடுக்கும் என்றார்.

வினையின் காரணமாக ஒருவன் தன் இஷ்டத்திற்கு செயல்களை செய்து கொண்டே இருப்பான். அவனது செயல்பாட்டில் உள்ள நன்மை தீமையை அவனால் அறிய முடியாது. ஆனால் முன்செய்த வினையின் காரணமாக இவனுக்கு இந்த உண்மை தெரியாது. அவன் செய்த பாவம், அவன் கண்ணை மறைத்துவிடும். இதையெல்லாம் மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால் சான்றோர்களின் துணை வேண்டும்.

நாம் போகின்ற பாதை சரியா? தவறா? அதில் ஏதும் குறைகள் இருக்கிறதா? அவைகளால் வினைகள் சூழுமா? இப்போது நம் செயல்பாட்டில் நன்மை இருக்கிறதா? இல்லை தீமை இருக்கிறதா? என்பதை சான்றோர்களின் துணை இருந்தால்தான் அறிய முடியும். பெரியவர்கள் ஆசியோடு இதையெல்லாம் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஞானிகளின் ஆசியோடுதான் முன் செய்த வினையை வெல்ல முடியும். முன் ஜென்மத்தின் வினையைப் பற்றி அறிந்து கொண்டால்தான், இந்த ஜென்மத்தில் வினை செய்யமாட்டான்.

**ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.**

**– திருக்குறள் – பேதைமை – குறள் எண் 835.**

ஊழ் என்பது முன் செய்த வினை. **பெருவலி** – வலி என்று சொல்லாமல் பெருவலி என்றார்.

**ஊழின் பெருவலி யாவுள?** – ஊழின் வலிமையை விட யாவுள? என்றார் மகான் திருவள்ளுவர். வினையின் வலிமைக்கு நிகரில்லை. முன் செய்த வினையைப் பற்றி, அதனுடைய வலிமையைப் பற்றி, யார் அறிந்து கொள்ள முடியும்?

**ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.**

**– திருக்குறள் – ஊழ் – குறள் எண் 380.**

**மற்றொன்று சூழினும் தான்முந் துறும்** – நாம் முன் செய்த பாவத்தை நீக்குவதற்கு என்னதான் முயற்சித்தாலும், அது அதன் வழி வந்து நிற்கும்.

பத்து வயது பையனுடைய கண்ணை ஒருவன் குத்தி விட்டான். ஒரு கண் பாழ்பட்டுப் போனது. அதை அறுவை சிகிச்சை செய்வதற்காக மருத்துவரிடம் சென்றார்கள். அந்த கண்ணை எடுத்தால்தான் சரியாகும் என்று மருத்துவர் சொல்லிவிட்டார். அதே சமயத்தில் இவனைக் கொண்டுபோய் அறுவைசிகிச்சைக்காக படுக்க வைத்திருந்தார்கள். எடுக்க வேண்டிய கண்ணை விட்டு விட்டு, மருத்துவர் அடுத்த கண்ணை எடுத்துவிட்டார்.

ஒருவன் முயற்சிக்கிறான். ஒரு கண்தான் போக வேண்டியது அமைப்பு. ஆனால் இரண்டு கண்ணும் போய்விட்டது. முன் செய்த வினையைத் தீர்க்க முயற்சிக்கிறான். ஆனாலும் அந்த முயற்சியில் ஊழ் வந்து நின்று கொள்கிறது.

**ஊழின் பெருவலி யாவுள?** – வலி என்று சொல்லாமல், பெருவலி என்று சொன்னார். யார் எதிர்க்க முடியும்? **மற்றொன்று சூழினும் தான்முந் துறும்** – ஒரு முறையைக் கையாண்டாலும், அதுமுன்னே வந்து நின்று கொள்ளும் என்றார். அவ்வளவு பெரிய நிலை, அவ்வளவு பெரிய சூழ்நிலை.

முன் ஜென்மத்தில் நீ இப்படியெல்லாம் இருந்தாய். உன்னுடன் தொழிலில் கூட்டாளியாக இருந்தவனுக்கு துரோகம் செய்தாய், முன் ஜென்மத்தில் உன்னை நம்பி வந்த மனைவியை சித்திரவதை செய்து கொன்று விட்டாய் என்று வினை சொல்லாது. வினைக்கு பேசத்தெரியாது, பேசவே தெரியாது. அப்படி வினை பேசினால்தான் தப்பித்துக் கொள்வானே?

வினைக்கு பேசத்தெரியாது. அது இனம் புரியாமலேயே உடன் இருந்து கொண்டே இருக்கும். அது எந்தெந்த நேரங்களில் வேலை செய்யும் என்றான்? ஏதாவது நல்ல காரியத்தை தொடும்போது குறுக்கே வந்து நின்று கொண்டு செய்யவிடாமல் தடுக்கும். ஆனால் தீய காரியத்திற்கு துணை போகும். இதைத்தான் முன் செய்த வினை என்றார். இதை எப்படி வெல்வது? ஞானிகளெல்லாம் வினையை வென்றிருக்கிறார்கள். உண்மைதான் இதை யாரும் மறுக்க முடியாது. முன் செய்த வினையை ஞானிகள் வென்று விட்டார்கள்.

முன் செய்த வினையை ஞானிகள் வென்று விட்டார்களா? ஆமாம் வினையை வென்றார்கள். வினையை வென்றால் சிறப்பறிவு வரும். முன் செய்த வினை நீங்கியது, சிறப்பறிவு வந்தது. சிறப்பறிவு வந்ததால் மேலும் வினையைச் சேர்க்காமல் இருக்கிறான்.

முன் செய்த வினையைப் பற்றி அறிந்து கொள்கின்ற அறிவின் துணை கொண்டு முன் செய்த வினையை நீக்கினான்.

முன் செய்த வினையை வெல்வதற்கு ஏதாவது உபாயம் இருக்கிறதா? என்றால் உபாயம் இல்லை, வினையை அனுபவித்துதான் ஆகவேண்டும். ஒன்றும் செய்ய முடியாது. யாராக இருந்தாலும் அவர்களை வினை விடாது, மற்றவர்களுக்கு உயிர் போகும். ஆனால் ஞானிகளின் அருள் பெற்ற இவனுக்கு உயிர் போகாது அவ்வளவுதான். உயிரோடு இருந்து முன் செய்த வினையை அனுபவித்தே தீர வேண்டும் என்பது சட்டம்.

காமத்தால், பொருள் வெறியால், ஜாதி வெறியால், ஆட்படையால், உத்தியோகத்திறத்தால், மதிநுட்பத்தால், அகந்தையால், தன்னடக்கம் இன்மையால் வினை சூழும். முன் வினையால்தான் கேடுகள் வரும். அவனவன்

கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நல்லது செய்யாமல், தீமை செய்தான். ஆட்படை இருந்தால் ஏவி விடுவான், உத்தியோகத்தில் இருந்தால் தனக்கு கீழே உள்ளவர்களை பழிவாங்குவான். அதுதான் அவன் வேலை.

கடவுள் உனக்கு ஏன் ஆட்படை கொடுத்தார்? ஒரு பாதுகாப்பிற்காக கொடுத்தார். ஆனால் அடியாட்களை வைத்து தன்னிடம் முரண்பட்டவர்களை அடிப்பதற்கு அல்ல. ஆனால் இந்த உண்மை அவனுக்குத் தெரியுமா என்றால் அவனுக்கு தெரியாது.

பணபலம் எதற்கு கொடுத்தான்? மற்றவனுக்கு உதவி செய்து நல்வினையை பெருக்கிக்கொள்வதற்காக.

இவன், ஆள் வைத்து ஒருவனுடைய காலை வெட்டிவிட்டான். இதற்கு இவனுடைய பணம் பயன்பட்டது.

நல்லவனுக்குப் பொருள் சேர்ந்தால் நன்மை செய்து ஆசி பெறுவான். அவன்தான் பாவி ஆயிற்றே? முடிந்தவரை பாவம் செய்துவிட்டான். கொஞ்சம் முன்கோபக்காரனுக்கோ, பிறரை பழி வாங்கி அதன் காரணமாக மகிழ்ச்சி அடைபவனுக்கோ, பொருள் பலமும், ஆள்பலமும் சேர்ந்து விட்டால்? அதோடு சரி, அடுத்த ஜென்மத்தில் அவன் கேட்பாரற்று மூலையில் கிடப்பான். இப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

தீய வினையை வெல்வது எப்படி? அறியாமையின் காரணமாகத்தான் வினைகளும், கேடுகளும் வந்தன. ஆட்படையாலும் வினை வரும், எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஆட்படை, பணபலம், உத்தியோகம், உடல் வலிமை, அறிவுத்திறன் அல்லது மதி நுட்பம் போன்றவை முன் செய்த நல்வினையால் வந்தது.

ஆட்படை கிடைத்தது முன் செய்த நல்வினை.

நல்ல நட்பு கிடைத்தது புண்ணியம்தான்.

உடல் ஆரோக்கியம் இருக்கிறது என்றால் புண்ணியம்தான்.

மதி நுட்பம் இருக்கிறது என்றால் புண்ணியம்தான்.

பொருள் வளம் இருக்கிறது என்றால் புண்ணியம்தான்.

உத்தியோகம் இருக்கிறது என்றால் புண்ணியம்தான்.

புண்ணியத்தால் கிடைத்த இந்த வாய்ப்புகளை ஒருவன் தீமைக்குப் பயன்படுத்தினால், உள்ள புண்ணியமும் போய் விடும், வினையும் சூழ்ந்து கொள்ளும்.

முன் செய்த தீயவினைகள் அறியாமையை உண்டாக்கியது, தான் செய்ததையெல்லாம் அவனுடைய மனம் நியாயப்படுத்திக் கொண்டே இருக்கும். இதிலிருந்து விடுபட பெரியவர்களையும், ஞானிகளையும் வணங்கச் சொல்கிறோம்.

பெரியவர்களெல்லாம் வினையை நீக்கியவர்கள். வினை இருந்தால் முன்னேற முடியாது, பிறவி வந்து விடும். வினையை நீக்கியவர்கள் அவர்கள்.

இவன் வினையை நீக்குவதற்குப் பாடுபடுகின்றான். இவனால் வினையைப் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. இவன் தன்னுடைய செயல்பாட்டில் உள்ள நன்மை, தீமையை அறிந்து கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறான்.

ஆசான் அகத்தியர், மகான் நந்தீசர், மகான் திருமூலதேவர் போன்ற ஞானிகள் வினை இல்லாதவர்கள். வினை இல்லாதவர்களை இவன் பூஜை செய்கிறான். அவர்களிடத்து, “வினையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு நீர்தான் அருள் செய்ய வேண்டும்” என்று கேட்கிறான்.

“சரி, நியாயமான வேண்டுகோள்தான். அது வேண்டும். இது வேண்டும் என்று கேட்காமல் வினையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு எனக்கு அருள் செய்ய வேண்டும் என்று கேட்கிறானே, இது நியாயமான வேண்டுகோள்தான். வினையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அருள் செய்ய வேண்டுமென்று கேட்கும்போது, ஆசான் மனமிரங்கி, “இது சாதாரண வேண்டுகோள் அல்ல” என்று இவனுக்கு சிறப்பறிவு தருகின்றார். ஆசான் அகத்தியரும், ஆசான் சுப்பிரமணியரும் இவனுக்கு சிறப்பறிவு தந்து, வினை எப்படி சூழும்? எந்தெந்த வகையில் வினை சூழும்? என்பதை உணர்த்துகின்றார்கள்.

மகான் திருவள்ளுவப்பெருமான் வினையைப் பற்றி நன்கு அறிந்தவர்.

**அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை**
**வஞ்சிப்பது ஓரும் அவா.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 366.**

கனிந்த வாழைப்பழத்தை உரித்து வைப்பதுபோல் லகுவாக சொல்வார்கள். **அஞ்சுவது ஓரும் அறனே** – அஞ்சுவது அறன். ஆசைக்கு அஞ்சுவதே அறன் என்றார்.

**ஒருவனை வஞ்சிப்பது ஓரும் அவா** – ஆமாம், ஒருவனை வஞ்சிக்கும். ஆசைதான் ஒருவனுக்குத் தீய வினையை உண்டுபண்ணும்.

**அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை**
**வஞ்சிப்பது ஓரும் அவா.**

ஆசை ஒருவனை வஞ்சிக்கும் என்று மகான் திருவள்ளுவப்பெருமான் சொல்கிறார். வினையைப்பற்றி அறிந்தவர், விவேகி மகான் திருவள்ளுவப்பெருமான். அவர்கள் இப்படி லகுவாக எல்லோருக்கும் புரியும்படி சொல்வார்கள்.

ஆனால் அப்படியெல்லாம் சொன்னாலும், திருக்குறளை லகு என்று நினைத்து விடாதீர்கள், உள்ளே புகமுடியாது. அப்படி உள்ளே புக முடியாத ஒன்றை சொல்லியிருப்பார். ஏனோ தெரியவில்லை. பெரியவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.

ஞானிகள் வினையைப்பற்றி அறிந்து, தங்களுடைய வினையை நீக்கிக் கொண்டார்கள். தன்னுடைய வினையை நீக்கியதால்தான் வினையைப் பற்றி அவர்களால் சொல்ல முடிந்தது.

வினையைப் பற்றி சொல்வதற்கு அறிவு வேண்டும் அல்லவா? இது சாதாரண விசயமல்ல. பெரியவர்களெல்லாம் வினையைப் பற்றி அறிந்தவர்கள், வினையை நீக்கிக் கொண்டவர்கள். அவர்கள் எழுதிய நூல்களில் உள்ள கருத்துகள், வினையை நீக்குவதற்காகவே இருக்கும்.

திருக்குறள் வினையை நீக்குவதற்காக சொல்லப்பட்ட நூலாகும். நாம் திருக்குறளைப் படிக்கிறோம். இனமே புரியாத பாஷை அதில் இருந்து கொண்டு இருக்கும். அது யோகிகளுக்குத்தான் தெரியும்.

ஞானிகள் அனைவரும் வினையை நீக்கிய மக்கள். ஆசான்தான் கடவுள். கடந்த ஒருவன் கடவுள்.

ஒரு சராசரி மனிதன், ‘‘வினையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்’’ என்று ஆசானிடம் கேட்கிறான்.

இதைக் கேட்டு நீ என்ன செய்யப் போகிறாய்? என்றார் ஆசான்.

‘‘தாங்கள் என்ன செய்து வெற்றி கண்டீர்களோ, அதை நான் செய்யப் போகிறேன்’ என்றான்.

‘‘ஓகோ! நான் வினையை நீக்குவதற்கு தவம் செய்தேன். நான் செய்ததெல்லாம் உன்னால் செய்ய முடியுமா?’’ என்றார்.

‘‘நீங்கள்தான் தவம் செய்ய வேண்டுமா? நாங்களெல்லாம் தவம் செய்யக்கூடாதா?’’ என்றான்.

‘‘அதற்குத் தடையில்லை. நாங்களெல்லாம் தயார்தான். நீ தவம் செய்வதற்கு நாங்கள் உதவி செய்கிறோம். இதற்கு ரொம்ப வைராக்கியம் வேண்டுமே?’’ என்றார்.

“உங்களிடம் வைராக்கியம் இருந்ததல்லவா? அதுபோல் நானும் வைராக்கியம் உடையவன்தான்” என்றான்.

“உன்னுடைய வினையைப் பற்றி நீ அறிந்துகொள்ள முடியுமா?” என்றார் ஆசான்.

நானும் அறிந்து கொள்கிறேன் என்றான்.

“வினையைப் பற்றி நீ அறிந்து கொள்ள என்னுடைய திருவடியைப் பற்று” என்றார் ஆசான்.

ஆசான் அகத்தியரை தினமும் பூஜை செய்கிறான். “வினையைப் பற்றி அடியேன் அறிந்துகொள்ளவும், வினையை நீக்கிக் கொள்ளவும் அருள் செய்ய வேண்டும்” என்று கேட்கிறான்.

ஆசான் அகத்தியர், மகான் நந்தீசர் போன்ற ஞானிகள் அனைவரும் அருள் செய்யக் கூடியவர்கள். ஆசான் அகத்தியரை பூஜை செய்ய, பூஜை செய்ய, பூஜை செய்ய வினையைப் பற்றி அறிந்துகொள்கின்ற அறிவு பன்னிரண்டு வருடத்தில் வரும். வினையைப் பற்றி அறிந்துகொள்வது சின்ன விசயமல்ல.

ஒருவனுக்கு வினை எப்படி வருகிறது?

ஆசையினால்தான் வருகிறது.

இதை அறிவதற்கு பன்னிரண்டு வருடமாகுமா? என்று கேட்டான்.

ஆசையினால்தான் வினை சூழ்ந்தது.

ஆசையில்லாமல் இருக்க முடியுமா?

ஆசை இல்லாமல் எப்படி இருக்க முடியும்?

செல்வத்தை சேர்க்காமல் இருக்க முடியுமா?

சேர்க்கலாம், முறை அறிந்து சேர்க்கவேண்டும்.

ஆசையினால்தான் வினை சூழ்கின்றது என்பதைப் பற்றி அறிந்தான், அதைப்பற்றி புரிந்துகொண்டான். இதற்கே பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும். ஆசையினால்தான் வினை சூழும் என்று தெரிந்து கொள்வதற்கு பத்து வருடமாகுமா? ஆமாம். பத்து வருடமாகும். ஆக புரிந்து கொண்டாய், அதை உன்னால் கடைப்பிடிக்க முடியுமா?

பொருள் சேர்க்கும்போது முறை அறிந்து சேர்க்க வேண்டும். நாம் சேர்த்த இந்தப் பொருள் பிறரை வருத்தி வந்த பொருள், இது வேண்டாம் என்பதை அறிவதற்கே பத்து வருடமாகும். பிறரை வருத்தி வந்த பொருளால் வினை சூழும் என்று அறிவதற்கு பத்தாண்டுகள் ஆகும். ஆமாம் இதை அறிவதற்கே பத்தாண்டுகள் ஆகும்.

நம்மால் ஈட்டிய இந்தப் பொருள் பிறரை வருத்தி, ஏமாற்றி சம்பாதித்த பொருள் என்று நீ சிந்திக்கலாம். அவன் அறிந்தோ அறியாமலோ வஞ்சிக்கப்பட்டிருக்கிறான், அதனால் வினை சூழ்கிறது. இதை அறிவது அவ்வளவு லகுவல்ல.

பொருள் சேர்க்கும்போது அதன் மூலமாக வினை சேர்கிறது என்பதை அறிந்து கொண்டான். ஆக தீதின்றி வந்த பொருளாக இருக்க வேண்டுமென்று ஆசானிடம் கேட்கிறோம்.

காமத்தால் வந்த கேடுகள்தான் உலகத்தையே ஆட்டிப்படைத்து வருகிறது, தொன்றுதொட்டு கோடான கோடி சான்றோர்களையும், ஆன்மீகவாதிகளையும், காமம் பதம் பார்த்து வருகின்றது.

கோடான கோடி சான்றோர்கள்! ஒரு கோடி இரண்டு கோடி அல்ல! கோடான கோடி சான்றோர்களை நரகத்தில் கொண்டு சேர்க்கிறது காமம்.

பொருளினால் கேடு வருகிறது. அதை ஈட்டும்போது நெறிக்கு உட்பட்டு ஈட்டாததனால் கேடு வந்தது. அதனால் வினை சூழ்ந்தது. இப்படிப்பட்ட பொருள் வெறியையாவது ஒரு பக்கம் தீர்த்துவிடலாம். இந்த காமத்தை என்ன செய்வது? "ஒன்றும் செய்ய முடியாது" என்றார். ஞானிகள்தான் காமத்தை வெல்ல முடியும். காமத்தை வெல்ல நினைத்தால் வெல்ல முடியாது. அப்படி லகுவாக வெல்வதற்கு கேள்வி ஞானமா இது?

பொருளின் மீது பற்றில்லாமல் இருப்பதற்கு பயிற்சி கொடுக்கிறான். என்னையா காசு? வேண்டாமையா என்று பயிற்சி கொடுத்துக் கொண்டே வந்தான். பொருள் மீதுள்ள வெறி தீர்ந்தது. ஆக பொருளின் தன்மையை தெரிந்தல்லவா நீக்க வேண்டும்? இவன் இஷ்டத்துக்கு நீக்கி வைத்துவிட முடியுமா? பொருளைப் பயன்படுத்தாமல் இருந்தால் ஆசை நீங்கிவிட்டது என்று அர்த்தமா? நாங்கள் பொருளாதாரத்தில் புழங்குகின்றோம். ஆனால் அதை இருப்பு வைத்துக் கொண்டு இருக்கிறோமா?

அறப்பணி செய்வதற்காக பொருள் வந்தது என்று அறிகின்ற அடிப்படை அறிவுதான் சிறப்பறிவு. பொருளின் இயல்பே அறப்பணியாகும். ஏனென்றால், நற்காரியங்களுக்காகத்தான் பொருள் வந்தது.

**தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தல் பொருட்டு.**

**– திருக்குறள் – ஒப்புரவு அறிதல் – குறள் எண் 212.**

சேர்ந்த பொருளைக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு அறப்பணி செய்ய வேண்டும். இதற்காகத்தான் செல்வத்தை கடவுள் கொடுத்திருக்கிறான். சேர்ந்த செல்வத்தை அறப்பணிக்கு பயன்படுத்த வேண்டும்.

நீதிக்கு உட்பட்டு வந்த பொருளால் பிறருக்கு கேடில்லை. தலைவன் அருளால் கிடைக்கப்பெற்ற அந்தப் பொருள் வஞ்சனையற்ற பொருள், நற்பொருள். ஆகவே, அதற்கு வினை இல்லை.

**பிரானருள் உண்டெனில் உண்டு நற்செல்வம்**
**பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்**
**பிரானருளில் பெருந் தன்மையும் உண்டு**
**பிரானருளில் பெருந் தெய்வமு மாமே.**

**– திருமந்திரம் – அருளுடைமையின் ஞானம் வருதல் – கவி எண் 1645.**

தலைவன் ஆசியால் செல்வம் கிடைத்தது. அந்தப் பொருள் நற்காரியத்திற்காக வந்தது, நல்ல ஞானமும், செல்வமும் தலைவன் ஆசியால்தான் வந்தது என்பதனால்தான் **பிரானருள்** என்று சொல்வார்.

நல்ல செல்வம் தலைவன் ஆசியால் கிடைக்கிறது. ஆனால் ஞானம்?

“எந்த ஞானம் வேண்டும்?” என்றான் தலைவன்.

“ஆசையே இல்லாத ஞானம்” என்றார்.

“அட! அவ்வளவு லகுவானதா அது?” என்றான்

ஆசையே இல்லாதது ஞானம் என்பதை, **அற்றது பற்றெனின் உற்றது வீடு** என்பார் மகான் ஔவையார்.

**அற்றது பற்றெனின் உற்றது வீடு** – ஆசையே இல்லாத நிலை.

**பச்சிலையால் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்**
**இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே – இச்சையிலார்**
**இட்டமலம் பட்டவிடம் எல்லாம் பொன்னாம்என்றால்**
**இட்டமதை விட்டற் கிசைந்திலையே.**

**– திருஅருட்பா – ஐந்தாம் திருமுறை – நெஞ்சறிவுறுத்தல் – கவி எண் 414.**

**இச்சையிலார் இட்டமலம் பட்டவிடம் எல்லாம் பொன்** என்பார் மகான் இராமலிங்கசுவாமிகள்.

எந்த ஆசை? என்ன ஐயா இவ்வளவு பெரிய வார்த்தையாக இருக்கிறது? என்றான். காமத்தால் ஒருவனுக்கு கேடு வந்தது. சரி, காமத்தை விட முடியுமா? காமத்திற்குக் காரணம் பசிதான் என்றார். சரி, பசியைத்தான் விட முடியுமா? என்றால் முடியாது.

ஞானிகளெல்லாம் பொருள் பற்றற்று இருப்பார்கள், காமத்தையும் விட்டிருப்பார்கள், விகாரம் அற்று இருப்பார்கள்.

தலைவனை கூப்பிட்டு, “நீ அடைந்த நிலையை நான் அடைய வேண்டும்” என்று கேட்கிறான்.

முன் செய்த வினைதான் நல்வினைக்கும், தீயவினைக்கும் காரணமாக இருக்கிறது. நீ அடைந்த பேரின்பத்தை நானும் அடைய வேண்டுமென்று கேட்கிறான். அவர் கொடுப்பதற்குத்தான் இருக்கிறார்.

ஞானிகளை பூஜை செய்வதனாலே பொருள் வெறி நீங்கியது, காமவிகாரம் நீங்கியது. பொருள் வெறியும், காம விகாரமும் நீங்கினால் அவன் கடவுள் ஆகிறான். இந்த இரண்டும்தானே ஒருவனுக்கு நல்வினையை, தீயவினையை உண்டாக்குகிறது.

ஞானிகளுக்கு பொருள் வெறியும் இல்லை, காம வெறியும் இல்லை, ஜாதி வெறியும் இல்லை, பரசொரூபமாக, தெய்வீகமாக இருக்கிறான். அது போன்ற நல்ல பண்புகள் வந்திருக்கிறது, தெய்வீகமான அறிவு, தெய்வீகமான குணப்பண்புகள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்றுவதற்கு காமமும், பொருள்வெறியும் பகையாக இருக்கும். ஜென்மத்தைக் கடைத்தேற்றுவதற்கு இவை இரண்டும் கேடு செய்யும், துணையாக இருக்காது. பெரியவர்களுடைய ஆசி இருந்ததனால்தான் வினை நீங்கியது. இரண்டுமே பகை.

இந்த உண்மையை அறிய பெரியவர்களுடைய ஆசி வேண்டும். இதை தெரிந்தவர்கள் ஆசானிடம் கேட்டு முறையாக பெற வேண்டும். “நீர்தானப்பா எனக்கு அருள் செய்ய வேண்டும்” என்றும் “வினையை வெல்ல நீர்தான் எனக்கு அருள் செய்ய வேண்டும்” என்று வினையை வென்றவனிடம் கேட்க வேண்டும்.

“பரவாயில்லை. நல்ல கருத்தைத்தான் கேட்கிறாய், நியாயம்தான், பிடித்துக் கரையேறிக் கொள். நான் வினையை வென்றவன். அதனால் நீ என்னை பூஜை செய்!” என்று சொல்கிறார். இவன் தொடர்ந்து பூஜை செய்கிறான்.

ஞானிகளை பூஜை செய்ய, பூஜை செய்ய அவனுக்கு வினையைப் பற்றி அறிகின்ற அறிவும், வினையை நீக்கிக் கொள்கின்ற அறிவும் வந்தது.

வினையை நீக்கிக் கொள்கின்ற அறிவுதான் சிறப்பறிவு என்று சொன்னோம்.

வினையை நீக்கிக் கொள்கின்ற அறிவு, அதனைவிட மேம்பட்ட அறிவு.

பெரியவர்களின் ஆசியினால் வினையைப் பற்றி அறிந்து, வினையை நீக்கிக் கொள்வதற்கு பாடுபட்டு வருகிறான்.

வினை எப்படி நீங்கும் என்பதைத்தான் பலமுறை சொல்லியிருக்கிறோம். வினை நீங்குவது என்பது எளிதல்ல. அப்படி ஒன்றும் அது கடைச்சரக்கு இல்லை. போ என்றால் போகாது. வா என்றால் வந்துவிடாது.

**முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்**
**பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்**
**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே.**

**– திருமந்திரம் – ஞானி செயல் – கவி எண் 2610.**

**முன்னை வினைவரின்** – முன் செய்த பாவங்கள்,

**வினைவரின்** – வந்தால்.

**முன்னுண்டே நீங்குவர்** – சாப்பிட்டுத்தான் தீர்க்க வேண்டும். **கொன்றால் பாவம் தின்றால் தீரும்** என்பார்கள்.

எப்படி தின்றால் தீரும்? முன் செய்த பாவங்கள்தான் பல்வேறு நோயாகவும், வறுமையாகவும், மன உளைச்சலாகவும் வரத்தான் செய்யும். அதை உண்டுதான் தீர்க்க வேண்டும், அனுபவித்துதான் தீர்க்க வேண்டும்.

முன் செய்த வினை நோயாக வரலாம், வறுமையாக வரலாம், மன உளைச்சலாக வரலாம். இப்படி சாப்பிட்டு தீர்க்க வேண்டுமென்பது சட்டம்.

**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவன் அருளாலே.**

**– திருமந்திரம் – ஞானி செயல் – கவி எண் 2611.**

பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள் என்பது யோகிகளுக்கு மட்டும் புலப்படக்கூடிய அந்தரங்கச் சொற்கள்.

**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே**

பொறிபுலன்களெல்லாம் தீய பாதையில் சென்றதனால்தான், தீயவினை சூழ்ந்தது. ஞானிகள் இதைத் தெரிந்து கொண்டார்கள். ஆகவே பொறிபுலன்களை நன்மையில் செலுத்தினோம் என்றார்கள்.

வினையைப் பற்றி அறிந்து, நீக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். வினையை நீக்குவதற்கு, வினையை நீக்கியவனுடைய ஆசி வேண்டுமென்று சொன்னோம். இதற்கெல்லாம் ஞானிகள் ஆசி இருக்க வேண்டும், இல்லையென்றால் முடியாது.

நாங்கள் ஆசான் ஆசியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். எந்த அளவிற்கு நமக்கு சிறப்பறிவு வந்தது என்று நமக்குத் தெரியாது. ஆனால் இது எப்போது புலப்படும்? சுத்தமாக வினையே இல்லாத காலத்தில்தான் நாம் நம்மை அறிந்து கொள்ள முடியும். இல்லையென்றால் நம்மைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியாது. நம்மைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கே பல ஜென்மங்கள் எடுத்தாக வேண்டும். அது ஒரு அமைப்புதான்.

முன் செய்த வினையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஞானிகளின் ஆசி வேண்டும்.

வினையைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் போதுமா?

நாம் செய்த பாவம் நோயாகவும், வறுமையாகவும், பகையாகவும் பிரச்சனையாக வரும்போது, இதற்கெல்லாம் வேறு யாரையும் காரணம் என்று நினைக்கக்கூடாது. அப்படி நினைத்தால் நிச்சயமாக இன்னும் அந்த அறியாமையிலிருந்து ஒரு அங்குலம் கூட இவன் நகரவில்லை என்று அர்த்தம்.

நாம் செய்தது நம்மை விட்டுப் போகுமா? யார் மீதும் குறை இல்லை. நாம் செய்த வினையைத்தான், நாம் இப்போது அனுபவிக்கிறோம் என்ற அறிவு வரவேண்டும். அந்தப் பக்குவம் வந்தபோது, வினையைப் பற்றி அறிந்து கொண்டான், பிறகு வினையை நீக்கிக் கொண்டான். மற்றவர்கள்மேல் குறை சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருப்பது நியாயமில்லை, அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வினைக்கு நாம்தான் காரணம். யார் மீதும் குறை இல்லை. நாம் செய்த பாவத்தால் நாம் இந்த துன்பத்தை அனுபவிக்கிறோம். இந்த உண்மையை உணரும்போதுதான், தலைவன் இவனுக்கு நோயையும் பிரச்சனைகளையும் தந்து வினையை தீர்த்து வைப்பான். இப்படித்தான் இந்த துறை இருக்கிறது.

**முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்**
**பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்**
**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே.**

**– திருமந்திரம் – ஞானி செயல் – கவி எண் 2610.**

நல்வினையைப் பெருக்கினால்தான் அறிவு வேலை செய்யும். வினையைப் பற்றி ஆசான் ஆசியால் தெரிந்து கொண்டோம். நல்வினையைப் பெருக்க முயற்சிக்கிறோம். வினையைப் பற்றி அறிந்து, வினையை நீக்கிக் கொண்டு, நல்வினையைப் பெருக்கவேண்டும்.

நல்வினை தீயவினைதானே பிறவிக்குக் காரணம்? ஒவ்வொரு நாளும் இதைப்பற்றி இப்படியே பேசி, விசாரம் செய்து கொண்டிருக்கிறோம்.

சான்றோர்கள், பெரியோர்கள், நூலறிவு என இப்படியே விசாரித்துக் கொண்டே போகிறான். அந்த பெரும்பாதையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறான்.

ஒருவன் வினையை நீக்க முயற்சி செய்யும்போது, தலைவனும் கூடவே இருந்து அருள் செய்வான். பெரியவர்கள் அவனுக்கு துணையாக வந்து வினையைத் தீர்ப்பதற்கு உதவி செய்வார்கள், முயற்சிக்கிறான், புறப்படுகிறான், அவர்களும் கூடவே வந்துவிடுவார்கள். “வா மகனே! உனக்கு உதவி செய்கிறேன்” என்று சொல்வார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவன் முயற்சித்தால் அவர்கள் அருள் செய்வார்கள். யாரும் அதை தடுக்க முடியாது. வினையை வெல்வதற்கு முயற்சிக்கிறான். ஞானிகள் துணையாக இருந்து இவனுக்கு எல்லாவிதமான உதவியும் செய்வார்கள், வினையை நீக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆக இப்படியே இருந்து ஒரு முறையைக் கையாண்டு அதற்கு பிறகுதான் தலைவனை வந்து சந்திக்கிறான்.

தலைவன் திருவடியை பூஜை செய்து, ஆசி பெறுகிறான். வினையைப் பற்றி அறிகிறான், வினையை நீக்குகிறான்.

மூச்சுக்காற்று புருவமத்தியில் ஒடுங்கும்வரையில் நல்வினை தீயவினையைப் பற்றி, இவனால் அறியமுடியாது. நல்வினையும், தீயவினையும் பிறவிக்குக் காரணம். நல்வினையும், தீயவினையும் அற்று இருக்க வேண்டும்.

அதற்கு ஒரு முறை இருக்கிறதா?

ஆமாம் இருக்கிறது.

சுவாசம் வெளியில் போனால் நல்வினை, உள்ளே வந்தால் தீயவினை. நல்வினை, தீயவினை வந்து போகின்ற காற்று.

நல்வினை தீயவினை என்பது வந்துபோகின்ற காற்று என்றும், இரவு பகல் என்றும், இடகலை பிங்கலை என்றும் சொல்வார்கள்.

வந்து போகின்ற காற்றை புருவமத்தியில் ஒடுக்கிவிட்டானென்றால் நல்வினை தீயவினை அற்றுவிடும். அவ்வளவு பெரிய ரகசியம் அதில் இருக்கிறதா? ஆமாம். வேறொன்றுமில்லை, நல்வினை, தீயவினை அற்று இருக்கிறான் என்று அர்த்தம். வந்து போகின்ற சுவாசம் புருவமத்தியில் ஒடுங்கிவிட்டது. நல்வினை தீயவினை என்பதை, இரவு பகல் என்றும் சொல்வார்கள். ஆக மூச்சுக்காற்று புருவமத்தியில் சென்று ஒடுங்கிவிட்டது.

புருவமத்தியில் நல்வினை தீயவினை ஒடுங்கி விட்டது. புருவமத்தியில் இந்துவும் ரவியும்தானே ஒடுங்க வேண்டும்? ஆனால் நல்வினையும், தீயவினையும் சேர்த்தே ஒடுங்கியதா என்றால், ஆமாம். நல்வினையும், தீயவினையும் சேர்ந்து ஒடுங்கியது. ஒடுங்கியது வெளியே வராது. வெளியே வராமல் இருந்தால்தான், அவன் நல்வினையையும், தீயவினையையும் அடக்கி விட்டான் என்று பொருள். தலைவன்தானே இதை செய்ய வேண்டும்? நம் இஷ்டத்திற்கு செய்ய முடியுமா? எல்லோருக்கும் செய்ய வாய்ப்பில்லையா? என்றால் வாய்ப்பில்லை.

இடகலை பிங்கலை அல்லது இந்து ரவி அல்லது சூரியகலை சந்திரகலை என்னும் ரகசியம் புருவமத்தியில் ஒடுங்கும்வரையில் நல்வினை தீயவினையைப் பற்றி அவனுக்குத் தெரியாது.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 5.**

யோகி, தலைவனுடைய ஆசி பெற்ற மகன், தலைவனை அழைத்து, “வினையை நான் அனுபவித்துவிட்டேன். நான் சொல்லவொணாத துன்பப்பட்டேன், கடன் இருந்தது, மனஉளைச்சலும், தாளமுடியாத தடுமாற்றங்களும் இருந்தன. இவற்றிலிருந்து தப்பிப்பதற்கு நீர்தான் அருள் செய்தாய். ஆனால், இடகலையும், பிங்கலையும் புருவமத்தியில் ஒடுங்குகிற வாய்ப்பையும் எனக்கு தர வேண்டும்” என்றான்.

சொல்லவொண்ணாத் துன்பத்தை அனுபவித்தான். அது ஆசானுக்குத் தெரியும். கூடவே இருப்பார்கள். வேறு வழி இல்லையப்பா, அனுபவிக்க வேண்டும் என்று சொல்வார்கள். கூடவே இருந்து வினையை அனுபவிக்கச் செய்வார்கள்.

ஆனால் உயிர் மட்டும் போகாமல் காப்பாற்றி விடுவார்கள். உயிர்போகாமல் காப்பாற்றி அந்த இடத்திலிருந்து “தப்பித்தோம் பிழைத்தோம்” என்று மேலே வந்து விடுவான். இவர்களுக்கும் தெரியும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களும் அப்படி இருந்தவர்கள்தானே? அவர்களும் அல்லற்பட்டவர்கள்தானே? “சரி, அனுபவி, ஒன்றும் பாதிப்பு இருக்காது” என்பார்கள்.

ஞானிகள் அவனுக்கு துணையாக இருந்து, வினையை கடைசிவரை அனுபவிக்கச் செய்வார்கள். வினை நீங்கிவிட்டது. அங்கே நல்வினையும் இல்லை, தீயவினையும் இல்லை. இனிமேல் இவனுக்கு வாசி நடத்திக்கொடு என்பார்கள். இதற்கு ஆசான் சுப்பிரமணியர்தான் துணையாக இருந்தாக வேண்டும்.

வினையைப் பற்றி அறிந்து, வினையை நீக்க ஆசி தந்த ஆசான் ஞானபண்டிதன் இவனுடைய இடகலையையும், பிங்கலையையும் சார்ந்திருப்பான். ஆசான் இவனை சார்ந்திருந்து, வாசியோடு வாசியாக கலந்து விடுவார்கள். வாசியோடு வாசியாக கலந்து இவனது வினையை தீர்க்கிறார்கள்.

இந்த உடம்பே நல்வினை, தீயவினைக்குக் காரணமானதுதானே? முன் செய்தது, நல்வினையாக இருந்தால் உடல் ஆரோக்கியம் இருக்கும். தீயவினையாக இருந்தால் நோய் சூழ்ந்த உடம்பாக இருக்கும். நல்வினை, தீயவினைக்கே காரணமானதுதான் உடம்பு.

புருவமத்தியில் வாசி ஒடுங்கியபின் நல்வினை, தீயவினை அற்று விடும். இடகலை, பிங்கலை எனும் ரகசியத்தை புருவமத்தியில் ஒடுக்கியதால் நல்வினை, தீயவினை அற்று விட்டது. தலைவன்தான் இதற்கு அருள் செய்ய வேண்டும். ஆசான் மனம் மகிழ்ந்து, இவனுடைய வாசியோடு வாசியாக கலந்துவிடுவார்கள். பிறகு முன் செய்த நல்வினை தீயவினையால் எடுத்த தேகத்தைப் பொடியாக்கிவிடுவார்கள்.

முன் செய்த பாவத்தால் நோய் சூழ்ந்த உடம்பும், முன் செய்த புண்ணியத்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆக உடல் ஆரோக்கியம் பிறவியை நீக்குமா? அது எப்படி பிறவியை நீக்கப்போகிறது? உடல் ஆரோக்கியம் என்பது நிலையில்லாதது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு ஆரோக்கியம் கெட்டுவிடும். உடல் ஆரோக்கியத்தால் மட்டும் ஒருவனுக்கு பிறவி தீராது.

உடல் ஆரோக்கியமாக இருக்கிறது, நல்வினைதான். ஒன்றும் குற்றமில்லை. ஆனால், இருவினை அற்றுப்போக வேண்டுமல்லவா?

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 5.**

**இறைவன் பொருள்சேர்** – இறைவனுடைய திருவருள்தான் பொருள், இறைவனுடைய திருவருள்தான் அருள். அந்தப் பொருளுக்கு அருள் என்று பெயருண்டு. இறைவனுடைய அருளை அடைந்தவர்களுக்கு இருவினை இருக்காது. ஆசான் ஆசியால் அந்த வாய்ப்பு கிடைத்தது.

இருவினையை அறிந்தான், நீக்கிக் கொண்டான். இருவினையும் அற்றுப் போனதால் ஆசான், வாசியோடு வாசியாக கலந்து, அவனுக்குப் புரிய வைக்கிறார். அப்படி புரியவைத்து, தீயவினைக்குக் காரணமான, தீயவினையை உண்டாக்கக் கூடிய தேகத்தை நீக்குகிறார்.

தீயவினைக்கு உரிய தேகத்தை நீக்கினால் என்ன மிச்சப்படும்?

இருள் நீங்கினால் அங்கே ஒளிதானே?

உமி நீங்கினால் அரிசிதான்.

ஆகவே, மலக்குற்றம் நீங்கியது. அங்கே ஒன்றுமில்லை.

நின்மலம் ஆகிவிட்டான்.

ஞானிகளெல்லாம் நின்மலம் ஆனவர்கள், மலமற்றவர்கள். ஆகவே **மலம் இலான் பாதமே** என்பார் மகான் திருமூலதேவர்.

**வாழ்கவே வாழ்க என்நந்தி திருவடி**
**வாழ்கவே வாழ்க மலம்அறுத்தான் பதம்**
**வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள்**
**வாழ்கவே வாழ்க மலம்இலான் பாதமே.**

**– திருமந்திரம் – சர்வ வியாபி – கவி எண் 3047.**

தலைவனை உலகத்திற்கு அறிமுகப்படுத்தும்போது, **மலம் இலான் பாதமே** என்று மகான் திருமூலதேவர் சொல்கிறார். மலம் இருந்தால்தானே ஐயா அவனுக்கு வினை சூழும்? இந்தப் பாடல்தான் நம்முடைய நிகழ்ச்சிகளில் நிறைவுப்பாடலாக வைத்திருக்கிறோம்.

மலமில்லாதவன்தான் வினையைத் தீர்க்க முடியும். மலம் அற்றால்தான் வினை அற்றுப்போகும். வினையை தீர்த்தவனுக்கு மலம் இருக்காது. 84 லட்ச ஜீவராசிகளுக்கும் மலம் இருக்க வேண்டும். பெரிய காட்டெருமை முதல் சிறிய பூச்சி வரை மலம் இருக்கும். நுண்ணிய உயிரினங்கள் வரை மலம் இருக்கிறது. ஆனால் ஞானிகளுக்கு மலம் இருக்காது. எனவே **மலம் இலான் பாதம்** என்றார் மகான் திருமூலதேவர்.

தலைவனை அறிமுகப்படுத்தும்போதும், ஆசானை அறிமுகப்படுத்தும்போது, வினை இல்லாமல் இருக்கிறார் என்றார். ஞானிகள் எதைக் கேட்டாலும் கொடுப்பதற்குத்தான் இருக்கிறார்கள். நீ எதைக் கேட்டாலும் கொடுப்பார். ஆனால் மலமற்ற ஞானிகளிடம் கேட்க வேண்டும்.

**அற்றது பற்றெனின் உற்றது வீடு** – பற்று அற்றுப்போனது, வீடு வந்தது என்றார். இதெல்லாம் பெரிய வார்த்தை.

**பச்சிலையால் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்**
**இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே – இச்சையிலார்**
**இட்டமலம் பட்டவிடம் எல்லாம் பொன்னாம்என்றால்**
**இட்டமதை விட்டற் கிசைந்திலையே.**

**– திருஅருட்பா – முதல் திருமுறை – நெஞ்சறிவுறுத்தல் – கவி எண் 414.**

இங்கு **இச்சையிலார்(ஆசையிலார்) இட்டமலம் பட்டவிடம் எல்லாம் பொன்** என்றார் மகான் இராமலிங்கசுவாமிகள். இப்படியெல்லாம் பலவகையில் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். புரியாது, ஆனால் ரொம்ப லகுவாக இருக்கும்.

எல்லா உண்மைகளையும் பெரியவர்கள் உணர்த்த வேண்டும். தினம் பூஜை செய்கிறான். முதலில் வினையைப் பற்றிக் கேட்டான், வினையை நீக்கிக்கொண்டான். வினையைப் பற்றி அறிந்து கொண்டான், நீக்கிக்கொண்டான். ஆசான் வந்து உணர்த்துவார்.

மலம் இலான் பாதத்தை பணியவேண்டும். நாம் வணங்கக்கூடிய ஞானிகள் அனைவரும் மலம் இல்லாதவர்கள், நின்மலமானவர்கள். மலம் இல்லாததனால் காமம் இல்லை. அவனுக்கு சுக்கிலம் கிடையாது. சுக்கிலம் இருந்தால்தானே அவனை கொல்லும்? அதை நீக்கி விட்டார்கள்.

ஒருவனை நரகத்தில் தள்ளுவது எது?

உள்ளே இருந்து கொண்டு குடை குடை என்று குடைந்து கொண்டிருக்கிற சுக்கிலம்தான் அவனை நரகத்திற்கு தள்ளுகிறது. அவன் மேல் உள்ள குறையா? இல்லை. அது கொலைக்கருவி என்பது அவனுக்குத் தெரியாது. அதுதான் அவனை நரகத்திற்குத் தள்ளுகிறது.

அவன் வானளாவி பேசிக் கொண்டிருப்பான். வானத்தை வில்லாக வளைப்பேன் என்பான். ஆனால் நரகத்திற்குப் போகப்போகிறான் என்று அர்த்தம்.

சுக்கிலம் அற்றவன் மலம் அற்றவன். அங்கே வினையே இல்லை.

ஆசை இல்லாதவன் சுக்கிலம் அற்றவன்.

ஆசை இல்லாதவன் மலம் அற்றவன்

ஆசை இல்லாதவன் பந்தபாசம் அற்றவன்

ஆசை இல்லாதவன் அறிவாளியல்லவா?

இப்போது மிக நுட்பமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். பெரியோர்களுடைய ஆசியில்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். வினை இல்லாமல், மலம் இல்லாமல் இருக்க வேண்டும்.

மலம் இல்லாதவன் வினை இல்லாமல் இருப்பான். மலம் உள்ளவனை நிச்சயம் வினை விடாது. பூதக்கண்ணாடி வைத்து ஏன் காரணத்தை தேடிக் கொண்டிருக்கிறாய்? எப்படி தேடினாலும் அறிய முடியாது. யோகிகளுக்குத்தான் இது இப்படித்தான் இருக்கிறது என்று தெரியும்.

அதை அறிந்தவன் யார்?

யார் வினை இல்லாதவன்?

யார் மலம் இல்லாதவன்?

யார் விந்து இல்லாதவன்? என்று தேட வேண்டும்.

விந்து அற்றது, வினை அற்றது.

மலம் அற்றது, வினை அற்றது.

மலம் அற்றது, காமம் அற்றது.

அவனை சூழ்ந்திருக்கும் அறியாமையை எல்லாம் வென்று விடுகிறான். அப்படிப்பட்ட ஓர் அறிவு அவனுக்கு வர வேண்டும். இல்லையென்றால் கிட்டே நெருங்க முடியாது. வினை இல்லாமல் இருப்பது என்பது என்ன கடைச்சரக்கா? வினை இல்லாமல் இருக்க வேண்டுமென்பது அவ்வளவு லகுவாகப்போய் விட்டதா?

வினை இல்லாதவன் மலம் இல்லாதவன்.

வினை இல்லாதவன் விந்து இல்லாதவன்.

விந்து ஜெயம் போக சர ஓட்டம் என்றார். நச்சுத்தன்மை உள்ள விந்து அற்றுப்போனது. ஆகவே வினை அற்றுப்போனது என்றார்.

நச்சுத்தன்மை உள்ளது இப்பொழுது இந்த உடம்பில் உள்ள விந்துவா? அல்லது உண்மையான விந்துவா? என்பது இவனுக்குத் தெரிய வேண்டுமல்லவா?

**உண்மையான சுக்கிலம் உபாயமாய் இருந்ததும்**
**வெண்மையாகி நீரிலே விரைந்து நீரதானதும்**
**தண்மையான காயமே தரித்து ரூபமானதும்**
**தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே.**

**– மகான் சிவவாக்கியர் பாடல்கள் – கவி எண் 251**

வாக்கியம் சிவவாக்கியம்.

நம்முடனே இருக்கக்கூடிய நச்சுத்தேகத்தைப் பற்றி அறிந்து, அந்த தேகத்தை நீக்கினால் அவனுக்கு பிறவி இல்லை. இதைப்பற்றி புரிந்து கொண்டல்லவா வினையைத் தீர்க்க வேண்டும்.

**அற்றது பற்று எனின் உற்றது வீடு** – அற்றது பற்று. உற்றது என்றால் பொருந்தியது. இதையெல்லாம் புரிந்து கொண்டல்லவா, வினையைத் தீர்க்க வேண்டும்.

வினை இல்லாமல் இருக்க வேண்டும். மகான் சுப்பிரமணியர் வினையைப்பற்றி அறிந்தவர். அவர்களுடைய ஆசியை பெறுவதற்குதான் நாங்கள் சொல்கிறோம்.

“அவர்களெல்லாம் பெரியவர்களப்பா! நீ அவரை விடாதே! அவரெல்லாம் மலமறிந்து, மலம் நீக்கினவர், நின்மலம் ஆனவர். நீ விடாதே பிடி” என்று அவனிடம் சொல்லி, அவனுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். தலைவனை அறிமுகப்படுத்த வேண்டும். இல்லையென்றால் நாங்கள் வந்த வேலை நிறைவேறாது. நாங்கள் எதற்கு வந்திருக்கிறோம்? இந்த உண்மைகளை மக்களுக்கு சொல்ல வேண்டுமல்லவா? இல்லையென்றால் எங்களுக்கு பாவம் சூழும்.

இப்படி தலைவனைப் பற்றிப் பேசும்போதுதான், ஒருவன் தலைவனை புரிந்து கொள்கிறான், தலைவன் வினை இல்லாதவன். ஆனால் முன்னே அவனுக்கு வினை இருந்தது. இப்போது தவமுயற்சியால் நீக்கிக்கொண்டான். நீயும் அவருடைய திருவடியைப் பிடித்துக் கொண்டு வினையை நீக்கப் பாடுபடு என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.

நஞ்சுதான் வினையைத் தூண்டியது. வினைக்குக் காரணம் நச்சுத்தன்மையான, நஞ்சு. அதுதான் வினைக்குக் காரணமாக இருந்தது.

நஞ்சு நீங்கியது! நஞ்செல்லாம் பஞ்சு பஞ்சாய்ப் போனது! என்றார் மகான் சிவவாக்கியர்.

**அஞ்சுமூணு மெட்டதா அநாதியான மந்திரம்**
**நெஞ்சிலே நினைந்து கொண்டு நீருருச் செப்பிரேல்**
**பஞ்சமான பாதகங்கள் நூறுகோடி செய்யினும்**
**பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே.**

**– மகான் சிவவாக்கியர் பாடல்கள் – கவி எண் 18.**

**அஞ்சும் மூணும் எட்டு –** அஞ்சு என்றால் பஞ்ச பூதங்கள், மூன்று என்றால் இடகலை, பிங்கலை, சுழுமுனை. இதை புரிந்து கொள்ள வேண்டும்.

**அநாதியான மந்திரம் –** இரண்டுமே அனாதை. பஞ்சபூதங்களும் அனாதை. பஞ்சபூதங்களுக்கு தாய் தந்தை இல்லை. இடகலை, பிங்கலை, சுழுமுனைக்கும் தாய் தந்தை இல்லை.

**நெஞ்சிலே நினைந்து கொண்டு நீருருச் செப்பிரேல் –** ஒரு முறை செபித்தாலே, அடுத்த உரு என்ன என்று தெரிந்துகொள்வான். இதையெல்லாம் மக்கள் புரிந்து கொண்டால் வினையைத் தீர்க்கலாம்.

**பஞ்சமான பாதகங்கள் நூறுகோடி செய்யினும் –** வினையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே –** வினை சூழ்ந்தாலும், பஞ்சுபோல் பறக்கும், தூள் தூள் பட்டுப்போகும் என்றார்.

நஞ்சு எது? அமிர்தம் எது? என்று இவனுக்குத் தெரியாது. ஆனால் இவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உடம்பு நஞ்சா? அமிர்தமா?

"அறிந்தவனுக்கு அமிர்தம். அறியாதவனுக்கு நஞ்சு"

பற்று அற்றால் வினை இல்லை. எது பற்று? அது தெரிய வேண்டுமல்லவா?

**பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று**
**நிலையாமை காணப் படும்.**

**– திருக்குறள் – துறவு – குறள் எண் 349.**

**பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்** – ஆசை அற்றபோதே பிறப்பு அறுக்கும். பிறவி அற்றுப்போனது என்று அர்த்தம். எல்லோரும் இதை உணர முடியுமா? ஆசை அற்றபோதே பிறவி அற்றுப் போகும். மகான் திருவள்ளுவர் இதற்கு உபாயம் சொல்வார். தொடர்ந்து சொல்லிக் கொண்டே போவார்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

**– திருக்குறள் – துறவு – குறள் எண் 350.**

உன்னால் முடியாது. யார் ஆசையில்லாதவரோ அவரைப் பிடித்து கரையேறிக்கொள் என்றார்.

ஆசை இல்லாதவன் என்றால் நச்சுத்தன்மை நீங்கியவன் என்று அர்த்தம். அவன் உடம்பில் இருந்த ஆசை நீங்கி விட்டது, நச்சுத்தன்மை நீங்கி விட்டது. நஞ்சு நீங்கியது, வினை தீர்ந்தது.

நஞ்சு என்ற விஷம் நீங்கியது. அந்த விஷம் நீங்கியது விவேகம் வந்தது. விவேகம் வந்ததனால்தான் விஷம் நீங்கியது, வினை நீங்கியது.

நாங்கள் அதைப் புரிந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். வினையைத் தீர்ப்பதற்குரிய அறிவு எங்களுக்கு வந்து விட்டது.

நீங்களெல்லாம் மேல்நாட்டில் சென்று படித்தீர்களா? என்று கேட்டார்கள். "அட ஒன்றுமில்லை ஐயா! ஆசான் அகத்தியரை பூஜை செய்தோம். ஏதோ முன் செய்த நல்வினை இருந்தது. ஆசான் அகத்தியரை பூஜை செய்தோம். வினையைப் பற்றி ஆசான் எங்களுக்கு உணர்த்தியதால் விவேகம் வந்தது. வினையைப் பற்றி உணர்த்தினார், அதை நீக்கினோம்"

இப்போது நஞ்சு நீங்கியது, வெற்றி உண்டாகியது. எங்களை தொடர்ந்து வஞ்சித்த, எங்களை மீண்டும் மீண்டும் நரகத்திற்கு இட்டுச் செல்லக் கூடிய தேகத்தை வெல்லுகின்ற வல்லமையை ஆசான் கொடுத்திருக்கிறார்.

எங்களை தொடர்ந்து வஞ்சித்த தேகத்தை ஆசானுடைய துணைக் கொண்டு நீக்கினோம். இன்று அந்த வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கிறோம். நீங்களும் அந்த வாய்ப்பைப்பெற நாங்களும் விரும்ப வேண்டும். இதை சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

பெரியவர்கள் ஆசியால்தான் முன் வினையை வெல்ல முடியும். இதை நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்த வாய்ப்பு எங்களுக்கு கிடைத்ததனால்தான் சொல்கிறோம்.

இந்த உடம்பு எங்களுக்கு அமிர்தமாக மாற வேண்டும். இதற்கு நாங்கள் எந்த அளவிற்கு பாடுபட்டிருக்கிறோம் என்று உங்களுக்கு தெரியாது. இது நாள் வரையிலும் விஷமாக இருந்த எனது உடம்பு அமிர்தமாக மாறி இருப்பதற்கு தலைவனை பூஜை செய்தோம்.

நாங்கள் சொல்வது ஒன்றும் கற்பனை அல்ல. நாங்கள் அனுபூதிமான்கள். எங்களது அனுபவத்தைச் சொல்கிறோம். எங்களுக்கு வினை தீர்ந்திருக்கிறது என்றால் நஞ்சு தீர்ந்திருக்கிறது, தொடர்ந்து வஞ்சித்த நஞ்சு நீங்கியது என்று அர்த்தம். இதுநாள் வரையிலும் எங்களுக்கு விஷமாக இருந்த உடம்பு இன்று அமிர்தமாக மாறுகிறது.

இந்த வாய்ப்பைப் பெறும் வரையில் வினையைத் தீர்க்க முடியாது. ஏதோ பேசிக்கொண்டு இருக்கலாம். இந்த வாய்ப்பை அன்பர்கள் எல்லோரும் பெற்று, வினையைத் தீர்க்க வேண்டும். ஞானிகள் அத்தனைபேரும் தங்கள் நச்சுத்தன்மையான தேகத்தை நீக்கி, அமிர்தமான தேகத்தைப் பெற்றவர்கள்.

நாங்கள் ஆசான் அகத்தியரையும், மகான் திருவள்ளுவரையும், மகான் இராமலிங்கசுவாமிகளையும் பூஜை செய்தோம். அதனால் வினையைப் பற்றி அறிந்து, வினையை நீக்கிவிட்டோம். இன்றைக்கு எங்களுக்கு விரோதமான உடம்பை நீக்கி நட்பாக்கிவிட்டோம். எங்களுக்கு விரோதம் செய்யக்கூடிய உடம்பை நீக்கி நட்பாக்கிக் கொள்வதற்கும் ஆசான் அருள் செய்தார்.

ஆகவே நாங்கள் முன்னேறி கொண்டிருக்கிறோம். அந்த எல்லைக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். இனி தோல்வி இருக்க முடியாது.

எடுத்துக் கொண்ட லட்சியத்தை முடிக்க நீர்தான் அருள் செய்ய வேண்டுமென்று ஆசானை கேட்கிறோம்.

**செத்தாலும் வைத்தடிபின் வாங்காது முன்னேறு**
**தீரமொன் றருள் புரியவும்**

**– மகான் மஸ்தான்சாகிபு – கவி எண் 6.**

செத்தாலும் வைத்த அடி பின் வாங்காது முன்னேறும் தீரம் ஒன்று அருள் புரிய வேண்டுமென்று ஆசானை கேட்டிருக்கிறோம்.

ஒரு நேரம் உணவு இல்லையென்றால் தாங்கமுடியுமா? இந்த உலகத்தில் 109 நாட்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டோம். பசியில்லை, சாப்பிடாமல் இருக்கிறோம். இது ஆசான் கொடுத்த அறிவு. ஆசான் கொடுத்த வாய்ப்பு. அறிவு இருக்கலாம், ஆனால் பட்டினியாக கிடக்க வேண்டுமே? அது எந்த அறிவு? என்றான்.

பட்டினியை அடக்குவது ஓர் அறிவு.

பட்டினி இல்லாமல் இருப்பதும், பசியை அடக்குவதும் அறிவு.

பசியே இல்லாமல் இருப்பது பேரறிவு.

ஆசான் ஆசியால் இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நாங்கள் அந்த இடத்திற்கு வந்து விட்டோம். நீங்களும் வினையைத் தீர்க்க வேண்டும்.

பசி இல்லாதவனுக்கு காமம் இல்லை.

பசி இல்லாதவனுக்கு பிறவி இல்லை.

நல்வினை, தீயவினையை வென்றவன்தான், அந்த இடத்திற்கு வருவான். ஞானிகள் ஒன்பது கோடிபேர் இருக்கிறார்கள். அத்தனைபேரும் இப்போது பதினாறு வயது பையன் போன்றிருப்பார்கள். இவன் இவ்வளவு சாப்பிடுகிறான், பார்த்தால் ஒன்றுமே இல்லை. உடம்பு பொற்சிலை போன்று இருக்கிறது. எல்லோரும் பதினாறு வயது பையன் போன்று பொற்சிலை போல் உடம்பு இருக்கும்.

அத்தனைபேரும் நிசப்தமாக இருக்கக் கூடிய ஒளி உடம்பை பெற்றவர்கள். தேகத்தில் மலமற்றதனால்தான் இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

வினை அற்றது, அறிவு தெளிவடைந்தது.

மலம் அற்றுப்போனது, அறிவு விவேகம் வந்தது.

இப்படியெல்லாம் இருக்கிறதென்று அன்பர்களிடத்தில் சொல்ல வேண்டும். நீங்கள் யாராவது முயற்சிக்கிறீர்களா? வாய்ப்பு கிடைத்திருக்கிறதல்லவா? நான்தான் இங்கே ஒருவன் இருக்கிறேனல்லவா? ஏதாவது முயற்சித்தீர்களா? வாரம் ஒருமுறைதான் வந்து போகிறீர்கள். அன்பு செலுத்துகிறீர்கள், அதில் ஒன்றும் குறையில்லை. இதற்காக என்ன பாடுபட்டிருக்கிறீர்கள்? என்றால் பதில் வராது. அவ்வளவு பெரிய விசயத்தை சாதாரணமாக நினைத்தீர்களா? வேறு வழியில்லை, நீங்களும் அதற்கு பாடுபட வேண்டும், வினையை நீக்க வேண்டும்.

மலம் அற்றதால் நச்சுத்தன்மை அற்று விட்டது. சுக்கிலத்தில் உள்ள நச்சுத்தன்மை நீங்கி விட்டது. விந்தில் இருக்கும் நச்சுத்தன்மை நீங்கி விட்டது, மலம் அற்று விட்டது.

மலம் அற்றால்தான் விந்தினுடைய நச்சுத்தன்மை தீரும். விந்தின் நச்சுத்தன்மை தீர்ந்தால் பற்று அற்றுப்போகும்.

**அற்றது பற்று எனின் உற்றது வீடு** என்று மகான் ஔவையார் லகுவாக சொல்வார்.

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு.**

**– திருக்குறள் – துறவு – குறள் எண் 347.**

என்பார் மகான் திருவள்ளுவப்பெருமான். அப்படியே உள்ளே புகுந்து வருவார். அவர்கள் பெரியவர்கள். இப்படியெல்லாம் ரகசியத்தை உள்ளே வைத்திருப்பார்கள். நாமெல்லாம் உள்ளே புகுந்து வருவதற்கு முடியாது.

வாரந்தோறும் எங்கே போகிறீர்கள்?

ஓங்காரக்குடிலில் ஞாயிற்றுக்கிழமைதோறும் குடிலாசான் பேசுகிறார். அதைக் கேட்க போகிறோம் என்று அன்பர்கள் சொன்னார்கள்.

நாங்கள் அறிந்த ஒன்றை, உங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் பசியற்று இருக்கிறோம். பசி இருக்கிறது! உணவு கொடுத்தால்தானே? ஒன்றுமே இல்லை. என்ன செய்வது? இப்படித்தான் இருக்கிறது. நட்டமா என்ன? ஆனால் அந்த பசி எங்களைக் கொல்லவில்லை.

பசி உங்களுக்கும் இருக்கிறது, எங்களுக்கும் இருக்கிறது. ஆனால் நீங்கள் அந்த பசியோடு 109 நாள் பட்டினி கிடந்திருந்தால் பசி உங்களைக் கொன்று இருக்கும். ஆனால் எங்களை பசி வாழ வைத்திருக்கிறது. அவ்வளவுதான், எங்களை பசி சாகடிக்கவில்லை.

பசி அற்றது, காமம் அற்றது.
பசி அற்றது வினை அற்றது.
பசி அற்றது வெற்றி! சிறப்பறிவு வந்தது.

அந்த வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கிறோம். எங்களை பிடித்துக்கொள், இதுதான் பாதை என்று சொல்கிறோம். மறுபரிசீலனை செய்யக்கூடாது என்று சொல்கிறோம். மறுபரிசீலனை செய்யாதே, சொன்னதைச் செய் என்கிறோம்.

என்ன செய்ய வேண்டும்? கஷ்டமாக இருக்குமா? என்றான். கஷ்டம் இல்லாமல் இருக்குமா? அவ்வளவு லகுவா இது? அவ்வளவு லகுவாக இருந்தால் எல்லோரும் ஞானத்திற்கு வந்துவிடமாட்டார்களா?

ஒரு ஐந்து நிமிடம் மகான் அகத்தியரை பூஜை செய்கிறாய். அடியேனுக்கு ஞானம் சித்திக்க அருள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள். ஓம் அகத்தீசாய நம, ஓம் அகத்தீசாய நம என்று சொல்கிறாய். அடியேனுக்கு ஞானம் சித்திக்க வேண்டும். நீர்தான் அருள் செய்ய வேண்டுமென்று கேட்கிறாய்.

ஞானம் என்பது என்ன?

வினையைப் பற்றி அறிவது. வினையை வெல்வது.

ஞானம் என்பது என்ன?

"விகாரமற்ற வாழ்க்கை. அதுதான் ஞானம்!"

தினமும் தலைவன் நாமத்தைச் சொல்கிறோம், பூஜை செய்கிறோம், அன்னதானம் செய்கிறோம். முடிந்தமட்டும் அன்னதானம் செய்கிறோம்.

வினையைத் தீர்க்க வேண்டும் என்றால், பொருள் பேராசை இருக்கக்கூடாது. அப்படியென்றால் பொருளை, கையாளக்கூடாது என்பதல்ல. பேராசை இருக்கக்கூடாது என்று சொல்வார்கள்.

முறையறிந்து வாழ்க்கையை நடத்த வேண்டும். அப்படியென்றால் திருமணம் செய்யக்கூடாதா? "யாரடா செய்யக்கூடாது என்று சொன்னது?" திருமணம் செய்யலாம். ஆனால், இந்த தேகத்தைப் பற்றி நீ புரிந்துகொள். தேகத்தைப் பற்றி புரிந்து கொண்டால் போதும். காலப்போக்கில் அதையும் வென்று விடலாம்.

நாங்கள் பேசிக்கொண்டு இருப்பது உங்களுக்கு ஒரு புரியாத புதிர். அப்படியே அதன் போக்கிலேயே போய்க்கொண்டு இருந்தால் காலப்போக்கில் புரியும்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 47.**

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் –** உடல் இயல்பு என்று அர்த்தம். அறத்தின் இயல்பு, உடலின் இயல்பு, இயற்கையின் இயல்பைப் பற்றி அறிந்து இல்வாழ்க்கை வாழ்பவன் என்பார். இல்லறத்தில் வாழ்பவன் நிச்சயம் ஞானி ஆகலாம்.

இதைத்தான் இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்றார். அறத்தின் இயல்பு, உடல் இயல்பு, இயற்கையின் இயல்பு என்பதையெல்லாம் அவைகளின் போக்கிலேயே சென்று, வென்று விடுவான்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 47.**

பிறவியை அறுக்க முயற்சிப்பவர்க்கெல்லாம், இந்த இல்லறத்தான் மேலானவன் என்றார். தலை என்றால் மேலானவன். அவன் பிறவியை அறுக்க முயற்சிக்கின்றானே தவிர, உடற்கூறு தெரியாது அவனுக்கு.

இல்வாழ்வான் உடற்கூறு தெரிந்தவன், இல்லறத்தில் இருந்து கொண்டே காலத்தை கடத்தி அந்த இடத்திற்கு வந்து விட்டான். அவனுக்கு அது தெரியவில்லை, உட்கார்ந்து இருக்கிறான். இவன் முன்னேறி விட்டான்.

பிறவியை வெல்ல முயற்சிப்பவனுக்கு அந்த இல்லறத்தான் தலைவன் ஆகிறான். அதன் கூடவே போகிறான். யாருடைய உபதேசம்? இல்லறத்தான் ஞானியா? என்று கேட்டான்.

“ஆமாம். இல்லறத்தான் ஞானிதான். நானல்லவா உபதேசம் செய்திருக்கிறேன்?” என்றார்.

என்ன உபதேசம் ஐயா?

“நீ பொருள் ஈட்டும்போது பிறர் பாவி என்று சொல்லாத அளவிற்கு ஈட்டிக்கொள். சிறந்த முயற்சி உள்ளவனாக இருந்து பொருளை ஈட்டிக்கொள். கடவுள் நினைத்தால் நீ பாவி ஆகாத அளவிற்கு நிச்சயம் பொருள் தருவார்.”

நீ பாவி ஆகும் அளவிற்கு உன்னை கைவிடமாட்டார்.

பூஜை செய்கிறாய், பொருள்வளம் இருக்கிறது. தினம் பூஜை செய்கிறான் பொருள் வளம் வந்தது. அது தீதின்றி வந்த பொருளாக இருக்கும். அதனால் வினை சூழாது.

தகுதியுள்ள பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்துகொள். அவ்வப்போது எழும் காம உணர்வை அவள் மூலம் அடக்கிக்கொள். அதனால் மனதில் சாந்தம் வந்தது, பூஜை செய்கிறாய். அவள் துணை கொண்டு தான தர்மம் செய்கிறாய், நட்பைப் பெருக்கிக் கொள்கிறாய், விருந்தை உபசரிக்கிறாய், அறப்பணி செய்து ஆசி பெற்றுக்கொள்கிறாய். இப்படியே வாழ்க்கையை நடத்திக் கொண்டு வா. அப்படியே அதன் போக்கிலேயே போ என்று சொன்னார். இப்படி உள்ளவன் வெற்றி பெறுவான்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 47.**

எவன் பிறவிப்பிணியை வெல்வதற்கு முயற்சிக்கிறானோ, அவனுக்கு இந்த இல்லறத்தான் தலைவனாவான். மகான் திருவள்ளுவப்பெருமான் இப்படியெல்லாம் ரகசியத்தை வைத்திருக்கிறார். இது யோகிகளுக்குத் தெரியும்.

அப்படியே அதன் போக்கிலேயே சென்று அதை வெல்வான். இதை யார் அறிவது? திருமணம் செய்தால் மனைவி தடையாக இருப்பாளா? இல்லை. அவள் எப்படி தடையாக இருப்பாள்? அவளும் ஜென்மத்தைக் கடைத்தேற்ற வந்திருக்கிறாள். நமக்குத் துணை ஒன்று கிடைத்திருக்கிறது. நாமும் பாவியாகாமல் முன்னேற ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று அவள் நினைப்பாள்.

நீ அவளை துணையாக வைத்து முன்னேறு, அவளும் முன்னேறுவாள். இப்படியெல்லாம் ஒவ்வொரு நாளும் அவன் கடமையைச் செய்து கொண்டே வந்தால், இவனும் முன்னேறுவான், சந்ததிகளும் முன்னேறலாம்.

இதையெல்லாம் நாம் மக்களிடத்தில் சொல்ல வேண்டும். இல்லறத்தானுக்கு ஞானம் உண்டு.

உடல் இயல்பு தெரிந்தவன்.

உயிரின் இயல்பு தெரிந்தவன்.

இயற்கையின் இயல்பு தெரிந்தவன்.

இம்மை மறுமை தெரிந்தவன்.

காமம் காமம் அற்ற தன்மையை அறிந்தவன்.

இரவு பகல் அறிந்தவன்.

நல்வினை தீயவினையை அறிந்தவனுக்கு இது தெரியும். இவைகளின் இயல்பைத் தெரிந்தவன். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்குத் தெரியவில்லை ஐயா என்றான்.

‘‘வேண்டாம். நீ தெரிந்து கொள்வதற்காக மணிக்கணக்காக உட்கார்ந்து படிக்காதே. மகான் அகத்தியரை பூஜை செய். அவர் உனக்கு உணர்த்துவார்.

எனக்கு நல்லது கெட்டது தெரியாதையா. ஏதோ செய்து கொண்டிருக்கிறேன். உன் நாமத்தை சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான் தெரியும். அறத்தின் இயல்பைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? அறத்தின் இயல்பு தெரியாமல் நான் பூஜை செய்கிறேன். நீர்தான் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், கை கொடுத்து அழைத்துப் போவார்.

வினாடிக்கு வினாடி இவன் முன்னேறிக் கொண்டிருப்பான். தலைவனின் துணை கொண்டல்லவா முன்னேறிக் கொண்டிருக்கிறான்?

பொருளறியாமல் பிறப்பறுக்க நினைப்பவன் என்ன செய்தான்? காவி உடை கட்டினான், தாடி வைத்துக் கொண்டான். தன் கல்வியை, அறிவை துணை கொண்டு வெல்லலாம் என்று நினைக்கிறான்.

ஆசான் திருவடியே கதியென்று நினைப்பவன் முன்னேறிக்கொண்டு போகிறான். இதை **இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்** என்றார். அவன் தான் கற்ற கல்வி துணைக்கொண்டு போகிறான். ஆனால் கடைத்தேறவில்லை, அவன் மூலையில் கிடக்கிறான்.

இவன் ஆசானை துணையாகக் கொண்டு போகிறான், முன்னேறிக்கொண்டான். இதையெல்லாம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும், புரிந்து கொண்டு இல்லறத்தை நடத்திக்கொள்ள வேண்டும். மனைவி, மக்களிடம் அன்பு காட்ட வேண்டும்.

பொருளுக்காக பாவியாகாது இருக்க வேண்டும், கர்வம் கொண்டு திரியக்கூடாது. கர்வம் கொண்டு திரியாமல் இருக்க ஆசான் ஆசி இருக்க வேண்டும்.

ஆசானை வணங்க வணங்க, உனக்கு மென்மையான அறிவு வரும், விகாரம் அற்றுப்போகும், கர்வமில்லாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

இப்படிப்பட்ட கருத்துகளை மக்களுக்குச் சொல்ல வேண்டும், மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும். சேர்ந்தால் போதுமா? மக்கள் தினம் பூஜை செய்தால்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும்.

முன் செய்த வினையைப் பற்றி அறிந்து கொண்டோம், நீக்கிக் கொண்டோம். ஆசான் ஆசியால் நல்வினை தீயவினையைப் பற்றி அறிந்து கொண்டோம். ஆக, பெரியவர்கள் ஆசியால்தான் எல்லாம் வரும்.

நான் சொன்ன வார்த்தையும் அவ்வளவு லகுவல்ல. **இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்** என்பது அவ்வளவு லகுவல்ல. இதற்கு தலைவனுடைய ஆசி இருக்க வேண்டும். அவரவர்கள் தலைவனை பூஜை செய்து முன்னேற வேண்டும், நிலை உயர வேண்டும், ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும், இல்லையென்றால் முடியாது.

வினை இல்லாமல் எப்படி வாழ வேண்டும்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். வினையைப் பற்றி அறிவதற்கு தலைவனுடைய ஆசியும், விவேகிகளுடைய ஆசியும் இருக்க வேண்டும். நாமெல்லாம் கூடி வழிபாடு செய்ய வேண்டும்.

வினையைப் பற்றி அறிந்தவர்களும், வினையை நீக்கிக் கொண்டவர்களும் இருப்பார்கள்.

வினையை வென்றவன் யாரோ என்று நினைக்காதீர்கள்.

நான்தான் அய்யா அது!

எங்களுக்குத் தெரியும் வினையின் காரணம் தெரியும். வினையை நீக்கிக் கொள்ளும் அறிவு இருக்கிறது. அந்த வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கிறோம்.

எங்களுக்குத் துணையாக இருந்து, நாங்கள் அறப்பணி மேற்கொள்ளும்போது, எங்களுக்குத் துணையாக இருந்து, எங்களுடைய மனம் மகிழும்படி நடந்து கொள்ள வேண்டும்.

இங்கே அன்னதானம் செய்கிறோம். இந்த இடத்தில் பத்து நிமிடம் தண்ணீர் கொடுக்க வேண்டும், அன்னதானத்தில் பரிமாற வேண்டும்.

பௌர்ணமி பூஜைக்கு அன்பர்கள் ஆண்களும் பெண்களுமாக வருகிறார்கள். பௌர்ணமி பூஜைக்கு வருவார்கள், நாமெல்லாம் அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும், சாப்பாடு பரிமாற வேண்டும். அவர்களை நல்லபடி உபசரித்து, அறப்பணியை செம்மையாக செய்ய வேண்டும். ஞானிகள் பார்க்கிறார்கள், நல்லபிள்ளை என்பார்கள்.

நல்லபிள்ளை என்று ஞானிகள் ஆசி கொடுத்தால் அது மகிழ்ச்சிதான். நாங்கள் மகிழ்ச்சி அடைந்தால் போதும். குடிலாசான் ஒருவர் மகிழ்ச்சி அடைந்தால் நவகோடி சித்தர்கள் மகிழ்ச்சி அடைந்ததற்கு ஒப்பாகும். அவ்வளவு பெரியவரா என்றான். ஆமாம், ஆமாம் ஐயா.

அதை ஏன் மறைக்க வேண்டும்?

குடிலாசான் மகிழ்ச்சி அடைந்தால் ஒன்பது கோடி ஞானிகள் மகிழ்ந்ததற்கு ஒப்பானது.

அவர் மகிழ்வதற்கு என்ன செய்வது?

அவன் மேற்கொள்கின்ற அறப்பணிக்கு தொண்டு செய். மனம் மகிழ்ந்து தொண்டு செய்தால் மனம் மகிழ்ச்சியடைகிறான். அந்த மகிழ்ச்சி உனக்குத் துணையாக இருக்கும்.

அந்த மகிழ்ச்சி உனக்கு செல்வத்தைப் பெருக்கும்.

அறிவு தெளிவடையும்.

வினையைப் பற்றி அறியலாம். வினையை நீக்கிக் கொள்ளலாம்.

ஆகவே, குடிலாசான் மனம் மகிழுமாறு நடந்து கொள்வதே நல்லது.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற குடிலாசான் செய்யும் அறப்பணிகளுக்கு, தொண்டு செய்து ஆசி பெற்றுக் கொள்ள வேண்டும். அதுவே, வினையை நீக்கிக் கொள்ள துணை புரியும். வேறு எங்கும் இது போன்ற இடம் இல்லை. இதை இமயமலை உச்சியில் இருந்து சொல்லலாம்.

நித்தம்நித்தம் குடிலில் மேற்கொள்ளும் அறப்பணிக்கு தொண்டர்களெல்லாம் வந்து தொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். தினம் தினமும் அன்பர்கள் மதியத்தில் வந்து, தண்ணீர் கொடுக்கிறார்கள், கம்மஞ்சோறு, நீர்மோர் கொடுக்கிறார்கள். கம்மஞ்சோறு, நீர்மோர் கொடுப்பதற்கு இங்கிருந்து ஒரு மைல் நடந்தாக வேண்டும். கம்மஞ்சோறு, நீர்மோர் 300 பேர் சாப்பிடுகிறார்கள்.

அதன் மூலமாகக் குடிலுக்கு புண்ணியம் சேர்கிறது. அதைச்செய்வதற்கு நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. அதுபோல வாய்ப்பு வேண்டுமென ஆசானைக் கேட்க வேண்டும்.

குடிலில் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு நான் தொண்டு செய்ய அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும். கம்மஞ்சோறு, நீர்மோர் ஊற்றலாம், தண்ணீர் ஊற்றலாம். அதற்கு அரைமணி நேரம் தொண்டு செய்யும்போது நமக்கு உடல் ஆரோக்கியம் வரும், நல்வினை பெருகுகிறது. குடில் ஆசானும், ஆசான் ஞானபண்டிதனும் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதன்மூலமாக நன்மை உண்டாகிறது.

மதியம் அன்னதானம் நடக்கிறது. அதில் பங்குகொண்டு தொண்டு செய்கிறோம். நாளை மறுநாள் **9**ம்தேதி பௌர்ணமி நிகழ்ச்சி இருக்கிறது. அதிலும் கலந்துகொண்டு தொண்டு செய்யலாம். இப்படி அறப்பணி செய்து கொண்டே இருக்கிறோம். என்ன நட்டமா**?** தொண்டு செய்து விட்டுப்போனால் என்ன**?** எங்களுக்கு வரும் செல்வத்தை வைத்தே தர்மகாரியம் செய்கிறோம், பௌர்ணமி பூஜை செய்கிறோம், கம்மஞ்சோறு, நீர்மோர் மற்றும் நித்திய அறப்பணி செய்கிறோம், நன்மை கிடைக்கிறது. குடிலாசானின் ஆசி கிடைக்கும். ஆசான் ஞானபண்டிதனின் ஆசி கிடைக்கும். இதுதான் வினையைத் தீர்ப்பதற்கு வழி என்று சொல்லி இருக்கிறோம்.

வினை முற்றும் தீர வேண்டுமென்றால், மலமற்றுப் போக வேண்டும். மலமற்றுப் போகாமல் வினை தீராது. நீங்கள் எல்லாம் அந்த வாய்ப்பைப் பெற வேண்டும், அந்த வாய்ப்பை அடைய வேண்டுமென்று உங்களை வாழ்த்துகிறோம்.

நாங்கள் மேற்கொள்ளும் அறப்பணிக்கு தொண்டு செய்யும் தொண்டர்கள் யாராக இருந்தாலும், அவர்களும் நீடு வாழ வேண்டுமென்று மனமார வாழ்த்துகிறோம். நீங்களெல்லாம் ஒவ்வொரு நாளும் தடைபடாது தொண்டு செய்து, ஆசி பெற வேண்டும். ஆக வினையைத் தீர்த்துக் கொள்வதற்கு என்ன உபாயம் என்பதை சொல்லியிருக்கிறேன்.

நாங்கள் அறிந்த, அடைந்த உண்மையை, அந்த ரகசியத்தை, பேரின்பத்தை நீங்களும் அடைய வேண்டுமென்று மனமார வாழ்த்துகிறோம். இந்த வார்த்தை தப்பாது. நீங்கள் நீடு வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறோம். நீங்கள் மேற்கொள்கின்ற அறப்பணிகள், மேற்கொள்கின்ற எந்த செயலுக்கும் துணை புரிவோம். இது நன்றி உள்ள துறையாகும். வணக்கம்.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## தைப்பூசம் மற்றும் தை மாத பௌர்ணமி விழா

நாள் : **துர்முகி ஆண்டு, தை மாதம் 27ஆம் தேதி,**
**09.02.2017 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## மாசி மாத பௌர்ணமி பூஜை

நாள் : **துர்முகி ஆண்டு, மாசி மாதம் 28ஆம் தேதி,**
**12.03.2017 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

## அன்பர்களின் அனுபவங்கள்

திருநெல்வேலி, திரு. M. சியாமளாதேவி, B.Com., அவர்கள் ஓங்காரக்குடிலாசானின் அருளால் பெற்ற அனுபவங்கள் குறித்து...

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

ஓம் சரவண மகா ஜோதி சூட்சும சடாட்சர ஆறுமுக அரங்கனே நம

நான் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வந்தபோது, K. சரவணன் அவர்கள் எனது தந்தை K. மகாராஜனையும், எனது தாயார் கிருஷ்ணவேணி அவர்களையும் எங்களது இல்லத்தில் சந்தித்து ஓங்காரக்குடிலைப் பற்றியும், சித்தர்கள் வழிபாட்டையும், சைவ உணவு மேற்கொள்வதைப் பற்றியும் சொன்னார்கள்.

அன்று முதல் எனது அப்பா, அம்மா இருவரும் தினந்தோறும் சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்து வந்தார்கள். ஞானத்திருவடி மாத இதழை தொடர்ந்து படித்து வந்தார்கள். ஓங்காரக்குடிலில் நடைபெறும் பௌர்ணமி விழாக்களில் கலந்து கொள்வார்கள். ஆசான் மீது அளவில்லா பக்தி கொண்டார்கள்.

இதற்கு முன் மிகவும் கடினமாகவும், கோபமாகவும் நடந்து கொள்ளும் எனது அப்பா மாறிவிட்டார்கள். அவரிடம் நிறைய மாற்றத்தை உணர்ந்தேன். ஆனாலும் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் கல்லூரி தோழிகளுடன் சேர்ந்து அசைவ உணவு உண்பேன். அது தவறு என்பதை என்னால் உணர முடியவில்லை.

ஓங்காரக்குடிலுக்கு நாங்கள் குடும்பத்துடன் வந்து ஓங்காரக்குடிலாசானை தரிசிக்கும்போது, நீங்களெல்லாம் சைவமா என்று எங்களிடம் ஆசான் கேட்டார்கள். எல்லோரும் ஆமாம் என்பார்கள். என்னால் மட்டும் ஆமாம் என்று கூற முடியவில்லை. மேலும் ஆசானை காணும்போது எனது கால்களில் நடுக்கம் உண்டாகும். அப்போதும் கூட நான் ஆசானைப் பற்றி உணரவில்லை.

சரவணன் அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து அன்னதானம் பற்றியும், ஆசானைப் பற்றியும் ஞானத்திருவடி நூலைப் பற்றியும் கூறுவார்கள். என்னால் அதை முற்றிலும் நம்பமுடியவல்லை. நான் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு வீட்டில் இருக்கும்போது எனது அப்பா ஞானத்திருவடி நூலை படிக்கச் சொல்வார்கள். ஒருநாள் நானாக முடிவெடுத்தேன். எல்லோரும் ஆசானைப் பற்றி சொல்கிறார்கள். நாமும் படிப்போம். என்னதான் இருக்கிறது என்ற ஆர்வம் எனக்குள் வரவே உடனே ஞானத்திருவடி நூலைப் படித்தேன், புரியவில்லை. இரண்டு மூன்று முறை படித்தும் உணர முடியவில்லை. நான் அசைவ உணவை கல்லூரி படிப்போடு நிறுத்திவிட்டேன். நான் சைவமாக மாறியும் உணர முடியவில்லையே என்று நினைக்கும்போது, எனது அப்பா வாரம் ஒரு முறை அன்னதானம் செய்வது பற்றி கூறியது நினைவுக்கு வந்தது.

நானும் அவருடன் சென்று அன்னதானம் செய்தேன். மனதில் இனம் புரியாத மகிழ்ச்சியும், ஒருவித நிம்மதியும், மன அமைதியையும் உணர்ந்தேன். பின்பு ஞானத்திருவடி மாத இதழை படிக்க ஆரம்பித்தேன், ஆசானை உணர்ந்தேன். மேலும்

திருநெல்வேலி மருத்துவமனை அருகில் உள்ள கோவிலில் தினமும் அருட்கஞ்சி மற்றும் அன்னதானம் நடைபெறும். அதில் தினமும் கலந்து கொண்டு, தொண்டு செய்து வருகிறேன். இப்போது நான் ஆசானை காணும்போது என்னுடைய கால் நடுக்கம் இன்றி மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் இருக்கிறேன். மேலும் ஆசான் நாமத்தை தினமும் கூறுவதால், எனக்கு மனநிம்மதியும், வீட்டில் சந்தோஷமும் இருக்கிறது. நான் சைவ உணவிற்கு மாறிய பிறகும், ஆசானை தினமும் பூஜை செய்த பிறகும் ஆசான் எங்களிடம் சைவமா என்று கேட்பதில்லை.

இப்போது ஆசானை நன்கு உணர்ந்து கொண்டேன். ஆசானை நான் உணரவில்லையெனில், மூடநம்பிக்கை கொண்டு சிறுதெய்வ வழிபாட்டில் இருந்திருப்பேன். நான் சிறுபிள்ளை, என்னுடைய அனுபவம் சிறியதுதான். ஆனால் நான் ஆசானை நன்கு உணர்ந்து கொண்டேன் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய அனுபவத்தை எழுதி இருக்கிறேன். மேலும் சைவ உணவை உண்டு, ஞானிகளின் நாமத்தை தினமும் பூஜை செய்து வந்தால் நன்மை உண்டாகும் என்பதை மகிழ்வுடன் கூறுகிறேன்.

நன்றி!

குருவின் திருவடி பணிந்து,

M. சியாமளாதேவி, B.Com., திருநெல்வேலி.


ஞானிகள் திருஉருவப்படங்கள்,

ஆசான் அருளிய நூல்கள்,

2017ஆம் ஆண்டின் தினசரி, மாத நாட்காட்டிகள், டைரிகள்

ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் (CD)

தேவைக்கு

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**

ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்,

ஓங்காரக்குடில்,

துறையூர் – 621 010.

✆ 04327–255184, செல்: 90950 33311

மின்னஞ்சல் : books@agathiar.in

ஓங்காரக்குடிலாசானிடம் தீட்சை பெற விரும்புகிறவர்கள் தொடர்புக்கு

**ந.நடராஜன்,**

கொள்கை பரப்பாளர், செல்: 98947 55784

# பருவமழை பெய்ய உபாயம்
# மகான் வரதரிஷி அருளிய அருள் சூட்சும நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் : 99655 71837

07.01.2017, சனிக்கிழமை

1. யோகராசனே அரங்கா போற்றி
யோகியர்களை உருவாக்கி உலகில்
வாகுடனே தரும ஞான உலகம் அமைக்க
வரம் பெற்று வந்த ஆறுமுக அரங்கனே

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் துர்முகி சிலை திங்கள்
வரங்களென மூவேழீர் திகதி காரி வாரம்
(துர்முகி வருடம் மார்கழி மாதம் 23ம் நாள் 07.01.2017, சனிக்கிழமை)
வழுத்திடுவேன் அருள் சூட்சும நூலை

3. நூலை வரதரிஷி யானுரைப்பேன்
நிலவுலக நலம் வேண்டி இனிதே
நாளை எண்ணி வாழ்வின் சுமையில்
நசிவுற்று தவிக்கும் கழனி மக்களே (விவசாய மக்கள்)

4. மக்களே இயற்கை வளம்பெற
மக்களே மழை வளம் பெருக
ஊக்கமுடன் உயிர்க்கொலை நீக்கி
உலகத்தில் சுத்த சைவநெறிக்கு வந்து

5. வந்துமே பலி பூசை வழி செல்லா
வடிவேலனே உயர் கடவுளெனும்
சிந்தை தெளிவுறும் வழிபாட்டை
செப்பிடுவேன் யாவரும் கடைப்பிடித்து

6. கடைப்பிடித்து கருணைபட நடக்க
கந்தவேலன் அருள் நிலை பெருகி
தடையற இயற்கையின் கருணை
தக்க மழையாகி இறங்கி அருளும்

7. அருளவே கழனி (விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்) கிருஷியும்
ஆபத்தில்லா நீர்வளம் பெருகி
அருளவே நிலவளம் பயிர் வளம்
அகிலமெங்கும் பசுமை நிலை காணும்

(உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து, சைவ உணவை மேற்கொண்டு தெய்வத்தின் பெயரால் ஒருபோதும் உயிர்க்கொலை செய்யாமல் இருந்து முருகப்பெருமானை கடவுளாக ஏற்றுக் கொண்டால் பருவமழை தவறாது பெய்யும்)

8. காணவே ஆறுமுக அரங்கன்
கஞ்சி தானமாக தருமம் பெருக்கி
ஞானபண்டிதனின் அவதாரமாக
ஞான உலகம் அமைக்க செயல்பட

9. செயல்பாட்டில் தொண்டர்களாகி
சேவை ஆற்றிட மக்களே வருகை புரிய
தயவு பெருகி இந்த கலியுகமே
தரும நல் உலகம் ஆகுமென்பேன்

10. ஆகவே இயற்கை மகிழ்ந்துமே
அகிலமெங்கும் மும்மாரி பொழியும்
யுகமே பசுமை பால் வளமுடன்
உயிர் காக்கும் பயிர் வளமும் பெருகும்

11. பெருகவே ஆறுமுகன் ஆளும்
பேருலகாம் பாதுகாப்பு மிக்க
முருகனருள் ஞான உலகமாகும்
முழுமை ஞானம் மக்களுக்கும் உறுதி ஆகும் அருள் சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் வரதரிஷி அருளிய அருள் சூட்சும நூலின் சாரம் :

எல்லையில்லா யோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகராஜனே ஆறுமுக அரங்கமகாதேசிகனே போற்றி போற்றி. யோகியர்களை உருவாக்கி உலகினில் அற்புதமான தரும ஞான உலகம் அமைத்திடவே அளவிலாத வரம் பெற்று முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகாதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி துர்முகி வருடம் மார்கழி மாதம் 23ம் நாள் 07.01.2017, சனிக்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் சூட்சும நூல்தனையே வரதரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வரதரிஷி.

**நாளை என்ன செய்வோம்? நாளை என்ன ஆகுமோ? எப்படி வாழ்வோம்? என்று எண்ணி வாழ்வின் சுமையில் நசிவுற்று தவித்து மனம் வெதும்பி துன்புறும் விவசாய மக்களே பொய்த்துப் போன**

**பருவமழை மீண்டும் தவறாது பெய்யவும், மழை பொழிந்து இயற்கை வளம் பெற வேண்டுமாயின், நீங்களெல்லாம் மன உறுதியும், ஊக்கமும் கொண்டு உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவ உணவை மேற்கொள்ள வேண்டும். தெய்வத்தின் பெயரால் ஒருபோதும் உயிர்பலி இடுதல் கூடாது.**

**எல்லாம்வல்ல ஞானபண்டிதன் முருகப்பெருமானை கடவுளாக ஏற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்லதும், முருகப்பெருமானால் உருவாக்கப்பட்டதுமான தூய தெளிவான வழிபாட்டு முறையாம் ஜோதி வழிபாட்டினை செய்வதுடன் ஜீவதயவு கொள்கையை கடைப்பிடித்து உலக உயிர்களிடத்து கருணையோடு நடந்திட வேண்டும்.**

**இவ்விதமே விவசாய மக்களே நீங்கள் நடந்திட்டால் உலகமெங்கும் கருணை பெருகி முருகப்பெருமானின் அருள் நிலை பெருகி தடையேதும் இன்றி இயற்கையும் உங்கள்பால் கருணை கொண்டு அற்புதமாய் தக்க மழையாக மாறி இறங்கி மழை பெய்து அருள் செய்திடுமப்பா.**

**இயற்கையின் கருணையாலே தேசமெலாம் நீர்வளம் பெருகி ஆபத்தில்லாத வகையிலே நீர் ஆதாரங்களும் பெருகி விவசாயமும், விவசாயம் சார்ந்த தொழில்களும் பெருகி உயர்ந்து நிலவளமும், பயிர்வளமும் செழிப்பாக உயர்ந்து பெருகி உலகமெலாம் பசுமை நிலை காணுமப்பா.**

இவ்வுலகினை செழுமையான உலகமாக மாற்றி ஞான உலகம் அமைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக ஆறுமுக அரங்கமகாதேசிகனாக அவதரித்து உலக மாற்றம் கருதி ஞான உலகம் அமைக்க தருமம் பெருக்கிட ஏதுவாக கஞ்சி தானமாக தர்மம் தன்னை அமைத்து செயல்படுகின்றாரப்பா.

ஆகவே உலக மாற்றம் நிகழ்ந்து ஞான உலகமாக இவ்வுலகம் மாறிடவே தொண்டர்களெல்லாம் அருட்கஞ்சி தானத்தில் தொண்டர்களாகி தொண்டுகள் செய்திட செய்திட, இவ்வுலகினில் தயவு பெருகி இக்கலியுகமே தரும நல்உலகமாக மாறிடும் என்பேனப்பா.

தரும உலகமாக இவ்வுலகம் மாறிட இயற்கையும் மகிழ்ந்து உலகமெலாம் மும்மாரி பொழிந்து யுகம் முழுதும் பசுமை பெருகி, பால் வளமுடன் மக்கள் உயிர் காப்பதும், ஜீவராசிகளின் உயிர்காக்கும் பயிர் வளமும் பெருகிடுமப்பா.

**உலகமெலாம் பசுமையும், கருணையும், தயவும், ஞானமும் பெருகிட இவ்வுலகம் முருகப்பெருமான் பேருலகமாக, ஞான ஆட்சி நடக்கின்ற நல்லுலகமாக ஆகி, முருகன் அருள் பாதுகாப்புமிக்க ஞான உலகமாக**

**மாறிடுமப்பா, முழுமை ஞானம் மக்களுக்கும் உறுதியாக கிட்டுமப்பா** என தமது அருள் சூட்சும நூல் மூலம் உலகறிய கூறுகின்றார் மகான் வரதரிஷி.

–சுபம்–

**அகத்தீசனை வணங்கி பூஜித்து ஆசி பெற்றிட்டால்...**

இதுநாள் வரையில் உலகத்தலைவனும், உண்மைக் கடவுளும், முருகப்பெருமான்தான் என்பதை அறியாமல் சிறுதெய்வங்களை வணங்கியும், அவற்றிற்கு உயிர்பலி இட்டும், உயிர்க்கொலை செய்தும் பாவச்செயல்களை செய்ததினால்தான், இவ்வுலகம் முழுதும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் போய், இயற்கையின் கோபத்திற்கும் ஆளாகியுள்ளது. முருகப்பெருமான்தான் உண்மைக் கடவுள் என்பதை உணர்ந்து ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானை வணங்கினால் அன்றி இவ்வுலகிற்கு விமோசனமே இல்லை என்பதையும் அறியலாம்.

**முருகப்பெருமான் திருவடிகளைப் பற்றி பூஜித்து ஆசி பெற்றிட்டால்....**

ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் கடவுள் முருகப்பெருமான்தான் என்பதை அறிய வேண்டும். முருகப்பெருமான் ஜாதி, மதம், இனம் கடந்த முழுமுதற் கடவுள் என்பதை அறிவதே சிறப்பு அறிவாகும்.

புரம் எரித்தான் மைந்தன் புண்ணிய வேலனை
கரம் குவிவார்க்கு உண்டாம் காட்சி.

அல்லல்படும் இவ்வுலகை ஆறுமுகன் ஆண்டிட
நல்லதொரு மாற்றமும் நாடு செழிக்குமே.

செவ்வையாய் இவ்வுலகை செவ்வேலன் ஆண்டிட
ஔவையும் போற்றிட அகிலம் செழிக்குமே.

யுகம்யுகமாய் தவம் செய்த ஓங்கார வேலவன்
அகம் மகிழவே ஆள்வான் அகிலம் செழிக்கவே.

கனிவுடன் இவ்வுலகை கந்தவேலன் ஆண்டிட
துணிவுமிக உண்டாம் தொண்டர்க்கே.

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற தொடர்புக்கு

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

ஓங்காரக்குடில், 113 நகர் விரிவாக்கம், துறையூர் - 621 010. திருச்சி Dt.

செல் : 90950 33311,

மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு

**R.சுரேஷ்** – 94434 21935

# முருகப்பெருமான் அருளிய தமிழகத்தின் எதிர்காலம்

## முக்காலமும் உணர்ந்த முருகப்பெருமான் எதிர்கால தமிழகநிலை குறித்து அருளிய அருட்சுவடி

தமிழக அரசியல் எதிர்காலமும், அதன் செயல்விளக்கமும், தமிழக மக்களின் நிலை, விவசாயிகளின் நிலை, மாணவர்களின் நிலைப்பாடு, இயற்கையின் செயல்பாடுகள் குறித்த விளக்கமும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளும்

## மகான் சுப்பிரமணியர் அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் : 99655 71837

20.01.2017, வெள்ளிக்கிழமை

1. அருந்தவ குருவே அரங்கா போற்றி
அறம் காத்து வருகின்ற அரசா போற்றி
மருந்தென உலக மக்கள் துன்பங்கட்கு
மாதவம் புரிந்து சேவையாற்ற வந்த தேசிகா போற்றி

2. போற்றியே சுப்பிரமணியர் யானும் அரங்கன் கேட்க
பூவுலகாம் பரதத்தில் தமிழக அரசியலில்
ஆற்றல்மிக்க அருந்தமிழ் மக்களின்
அறிவிப்பேன் எதிர்காலம் அரசியல் செயல்பாடு

3. செயல்பாட்டுடன் செந்தமிழ் மக்களின் நிலைப்பாடு
சேவையாக கழனி (விவசாயம்) புரிகின்ற கழனி மக்கள் நிலை (விவசாயிகள்)
அவனியிலே சமூகத்தின் தூண்களாம்
அறிவிப்பேன் ஆற்றல்மிக்க மாணவர்களின் நிலைப்பாடு

4. நிலைப்பாட்டுடன் நிலைபடா இயங்குகின்ற
நிலவுலகில் இயற்கை நிலை இயற்கையின் செயல்பாடுகள்
ஞாலமதில் இந்தவித செயல்பாடுகள் குறித்து
ஞானபண்டிதன் யான் துர்முகி கலை திங்கள் தன்னில்
(துர்முகி வருடம் தை மாதம் 20.01.2017, வெள்ளிக்கிழமை)

5. தன்னிலே அறிவுரை ஆசி சூட்சுமமாக
தமிழக நிலைகள் குறித்து விளக்க வந்தேன்
அண்ணலாய் ஆறுமுக அரங்கன் கேட்க
அறிவிப்பேன் அரசியலில் பெருமாற்றம் உண்டு

6. உண்டப்பா ஊழல்வாதிகள் ஒழிந்து
உயர்வான சமூக நல காப்பாளர்கள்
கொண்டுரைப்பேன் அரசியலுக்கு வருகை புரிவர்
குவலயத்தில் அரசியலை எதிர்மறையாய் எண்ணியவர்கள்

7. எண்ணியவர்கள் அவசியம் என்று மனஉறுதி கொண்டு
இளைஞர்களோடு இணைந்து பெரும் சேவையாற்ற
கண்ணியமாக இறங்கி செயல்படுவார்கள்
கந்தவேலன் யானும் இந்தவித உயர்மக்களை

8. மக்களை வருமுலகில் தேர்வு செய்வேன்
மண்ணுலகில் மரபுவழி தலைவர்கள் என்று சொல்பவர்கள் எல்லாம்
ஊக்கம் இழந்து உரிய தலைமை இழந்து தவிப்பர்
ஊழல் புரிவோர்களும் இவர்களோடு இணைந்து செயல் இழப்பர்

9. இழப்பு மிகுதி கொண்ட குழப்பம் கொண்ட
இக்கட்டான சூழலிற்கு தமிழகம் சென்று
கலக்கம் மக்களிடை உரிமைக்கான புரட்சி
கட்டுக்கோப்பான தமிழர்கள் உணர்வு பெருகி

10. பெருகிய பின்னே அரசாங்க செயல்பாடுகள்
பிழையில்லாத மாற்றத்திற்கு வரக் கூடும்
ஆறுமுகன் யானும் சூட்சும ஆற்றலாக
ஆக்கம் தந்து மக்களை ஒன்றிணைத்து இயக்குவேன்

11. இயக்கவே மக்கள் தன் உரிமைகளை
இணைந்து போராடி பெறும் சூழல்தனை உருவாக்குவேன்
தயக்கமும் தவிப்பும் மிகுந்த விவசாயிகள்
தண்ணீர் பஞ்சம் வந்து வறுமை சூழல்

12. சூழல் மிகுந்து இக்கட்டான நிலைப்பாடுகள்
சூழ்நிலைகள் வழி கழனி மக்கள் நசிந்து
ஆள்பவர்களால் காக்க முடியாத துன்பங்கள் நேரும்
அதுகாலம் பசுமை புரட்சி வெள்ளை அறிக்கை

13. அறிக்கைகள் போன்ற பல புதிய சட்டங்களும்
அரசால் உருவாக்கப்பட்டும் காக்க முடியாத
வறிய நிலை துன்பங்கள் மிகுபடும்
வாழ்வாதாரம் எண்ணி கழனியை விட்டு கழனி மக்களே

14. மக்களெல்லாம் தொழில் மாற்றம் இடமாற்றம்
மண்ணை விட்டு குடிபெயரும் நிலைகளும் உண்டாகும்
ஊக்கமில்லாத இந்தவித சூழல்களில் தான்
ஊழல்வாதிகள் மேல் புரட்சிகள் உண்டாகி

15. உண்டாகியே பணமுதலைகள் அநீதி மாந்தர்கள்
உலகத்தில் இவர்கட்கு எதிர்மறையான புரட்சி
கண்டிடவும் நேரும் இந்த கலியுகம் தன்னில்
காணவே இந்தவித காலம் தன்னில்

16. தன்னிலே கழனி வாழ் மக்களோடு
தன்னார்வ தொண்டர்கள் இளைஞர் பெருமக்கள்
நன்னயமாய் மாணவச் செல்வங்கள் பொதுமக்களோடு
நன்மை கருதி புரட்சிகள் செய்து மாற்றம் தன்னை

17. தன்னையே உருவாக்கும் அற்புதத்தை
தண்டபாணித் தெய்வம் யானும் நடத்தி அருள்வேன்
இன்னலான இயற்கை சூழலை மாற்றியமைக்க
என் அருள் பெற்ற மக்களாய் தமிழக மக்கள்

18. மக்களெல்லாம் ஆறுமுகன் வழிபாட்டிற்கு
மண்ணுலகில் ஜோதி வழிபாட்டிற்கு வரவேண்டும்
ஊக்கமுடன் சுத்தநெறி கடைப்பிடித்து
உணவில் இயற்கைவழி உணவு முறைகளோடு

19. முறையாக இயற்கை வழி மருத்துவங்கள்
முழுமைபட தமிழ் மண்ணில் கிடைக்கும்
உணவு வகைகள் வலுவாது ஏற்றுமே
அன்னிய பொருள்களை புறக்கணித்து வடிவேலன் என்

20. வடிவேலன் என் வழிபாடுதன்னை உறுதி செய்ய
வள்ளலாய் என் அவதாரமாய் வழிகாட்டும் ஆறுமுக அரங்கன்
அழியாமை ஞான கொள்கையை பின்பற்ற
அறம் தருமத்தை தடைபடா செய்துவர

21. வருகவே தமிழக அரசியலில் பாதுகாப்பும்
வருமுலகில் சிக்கல் இல்லாத செயல்பாடும்
ஆறுமுகன் ஆளுகின்ற உயர் ஆட்சியாக
அகிலமதில் தமிழகம் தமிழக மக்களும்

22. மக்களும் பாதுகாக்கப்படுவது உறுதி
மரபுவழி தமிழக கலாச்சாரங்கள் யாவும்
ஊக்கமுடன் ஆள்பவர்களால் பாதுகாக்கப்பட்டு
உலகம் வியக்க தமிழகச் சூழல் உயர்வாகும் ஆறுமுகன் என் அருளால்
அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூலின் சாரம் :

குடிலாசான் ஆறுமுக அரங்கமகாதேசிக சுவாமிகள் உலக நன்மைக்காகவே தவம் செய்து வருகின்றார்.

தமிழக அரசியல் எதிர்காலம், தமிழ் மக்களின் நிலைப்பாடு விவசாயம் மற்றும் விவசாயிகளின் எதிர்கால நிலை சமுதாயத்தின் தூண்களாக சொல்லப்படும் மாணவர்களின் நிலை, தொடர்ந்து எதற்கும் கட்டுப்படாமல் இயங்கும் இயற்கையின் நிலை போன்றவைகளை குறித்து ஆறுமுக அரங்கமகாதேசிகன் சுப்பிரமணியராகிய எம்மைக் கேட்க, சுப்பிரமணியர் யானும் துர்முகி வருடம் தை மாதம் 7ம் நாளாகிய இன்றைய நாளிலே (20.01.2017, வெள்ளிக்கிழமை) அறிவுரை ஆசி சூட்சும நூல் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான் தமது அருட்சுவடி மூலம்.

முருகப்பெருமான் யான் உரைக்கின்றேன் தமிழக அரசியலிலே ஒரு பெருமாற்றம் நிகழப் போகிறது, ஊழல் செய்கின்றோர் எல்லாம் ஒழிந்து உயர் பண்புகள் உடைய சமூக நல காப்பாளர்கள் எல்லாம் இதுவரை நமக்கேன் அரசியல், அரசியல் வேண்டாம் என ஒதுங்கி இருந்ததை விட்டுவிட்டு நாட்டின் நிலை கருதி மன உறுதியோடு இளைஞர்களுடன் இணைந்து பெரும் சேவைகளை செய்ய நாட்டினில் இறங்கி கண்ணியமான முறைகளிலே செயல்படுவார்கள். அப்படிப்பட்ட உயர் பண்புகளை உடைய சமூக ஆர்வலர்களையும், இளைஞர்களையும் முருகப்பெருமானாகிய யானே அந்தரங்கத்தில் சுத்தியுடையோராய் தேர்வு செய்து களத்தில் இறக்குவேன்.

நாங்கள் பாரம்பரியமான அரசியல்வாதிகள், நெடுநாள் அரசியல் செய்பவர்கள், மரபு வழியாய் அரசியல் புரிகிறோம் என்று சொன்னவர்கள் எல்லாம் அவரவரும் ஊக்கம் இழந்து அவரவர் தம்மை வழி நடத்தும் தலைமைகளை இழந்து தவிக்க நேரும். இவர்களை அண்டி ஊழல் புரிந்து வாழ்ந்தவர்களும் செயல் இழப்பார்கள். அதனால் அரசியல்வாதிகளுக்கும், அதனைச் சார்ந்து தீயவழி சென்று பொருள் மிகுதி சேர்த்தவர்களுக்கும் இழப்பு மிகுதியாக உண்டாகி குழப்பம் ஏற்படும், குழப்பமான இக்கட்டான சூழ்நிலைக்கு தமிழகம் தள்ளப்படும். ஆதலினால் தமிழக மக்களிடையே தமிழகத்தின் உரிமைக்கு குரல் கொடுக்க ஆளில்லாமல் மக்களிடையே நமக்கு குரல் கொடுக்க ஆளில்லையே என ஏங்கி உரிமைக்கான புரட்சி மக்களிடையே தோன்றி தமிழர்கள் எல்லாம் ஒன்றிணைந்து

தமிழர் இன உணர்வு பெருகி கட்டுக்கோப்பான வகையில் தமிழினம் உருவாகி அதன்பின்னே அரசின் செயல்பாடுகள் எல்லாம் பிழையேதும் இன்றி நல்ல மாற்றத்திற்கு வரக்கூடுமப்பா. முருகப்பெருமான் யானே தமிழக மக்களிடையே அந்தரங்கத்தில் செயல்பட்டு சூட்சும ஆற்றலாய் வெளிப்பட்டு ஆக்கமும், ஊக்கமும் தந்து தமிழக மக்களை ஒன்றிணைத்து இயக்குவேன்.

ஆதலினால் முருகப்பெருமான் எம்மால் மக்கள் இயங்கவே மக்கள்தம் உரிமைகளை இணைந்து போராடி வெற்றி பெறும் சூழலையும் உருவாக்குவேன்.

தயக்கமும், தவிப்பும் மிக்கவர்களாய் உள்ள விவசாயிகள் இன்று உள்ள தண்ணீர் பஞ்சம் மேலும் விரிவடைந்து கடும் தண்ணீர் பஞ்சத்தை காண்பார்கள். தமிழ்நாடு கடும் வறட்சியை சந்திக்கும். நாட்டில் வறுமை தாண்டவமாடும். இக்கட்டான நிலைப்பாடுகள் உண்டாகும். விவசாய மக்கள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டு நசிந்து போவார்கள். அரசாள்பவர்கள் பசுமைப்புரட்சி உண்டாக்குவோம், வெள்ளை அறிக்கை விடுகிறோம் என மக்களுக்கு பல திட்டங்களையும், கூட்டங்களையும் போட்டு மக்களிடையே அறிவித்தாலும், அவை இயற்கையின் முன் தோற்றுப்போகும். நாட்டில் அரசால் காப்பாற்ற முடியாத அளவிலே வறுமை உண்டாகி துன்பங்கள் நாட்டில் மிகுந்து காணப்படும், வாழ்வு ஆதாரம் இழந்து விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல்போய் மழையும் இல்லாமல் அரசின் ஆதரவும் இல்லாமல் விவசாயத்தை கைவிட்டு சொந்த ஊர்களை காலி செய்து விட்டு பிழைப்பிற்காக வேலை தேடி வெளியூர்களுக்கு சென்றும் வேறு வேலைகளை செய்தும் வாழ்வு நடத்தும் அவலநிலை உண்டாகும்.

சற்றும் நிம்மதியில்லாத இந்த கொடுமையான சூழல்களிலே நாட்டினில் ஊழல்வாதிகளின் ஊழல் தன்மை மக்களை வெகுண்டு எழச் செய்து, ஊழல்வாதிகள் மேல், மக்களுக்கு தெரிந்துபோய் மக்கள் புரட்சிகள் உண்டாகி தன்னலம் மிகுந்த பணமுதலைகளுக்கும் தீயவழியிலே சென்று மக்களை ஏமாற்றி பணம் பறித்திட்ட அநீதி மக்களுக்கும் எதிராக புரட்சி உண்டாகும் இந்த கலியுகத்தினிலே.

இந்தவிதமான புரட்சி காலங்களிலே விவசாயப் பெருமக்களோடு தன்னார்வ தொண்டர்களும், இளைஞர்களும், கல்வி பயிலும் மாணவர்களும் இவர்களோடு பொதுமக்களும் தேசத்தின் நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு பேதாபேதமின்றி களத்தில் இறங்கி புரட்சிகளை செய்து நாட்டினில் மாற்றங்களை உண்டாக்கும் அதி அற்புத செயலினை முருகப்பெருமானாகிய யானே மக்களை சார்ந்து நடத்தி அருள்வேனப்பா.

தமிழக மக்களே உங்களை வாட்டும் இயற்கை சூழல் சாதகமாய் மாறி அமைந்திட வேண்டுமாயின் மக்களெல்லாம் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு ஜோதிவழிபாடான முருகப்பெருமான்

எனது வழிபாட்டிற்கு வந்துவிட வேணுமப்பா. தாம் வாழ பிற உயிரை கொல்வது பாவம் என்பதை உணர்ந்து தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி இடுதல் கூடாதப்பா. இயற்கை உணவு முறைகளை கையாண்டு மனதையும் உடம்பையும் கெடுக்கும் செயற்கை ரசாயன உணவு முறைகளை கைவிட வேண்டுமப்பா. இயற்கையோடு இணைந்த இயற்கை வைத்தியங்களை செய்து இயற்கையுடன் ஒன்றி வாழப் பழகுங்கள். தமிழக மக்களுக்கு இயற்கை கொடையாக அளித்த தமிழக உணவு முறைகளை கடைப்பிடியுங்கள். வெளிநாட்டு சூழலிற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட அன்னிய பொருள்களை புறக்கணித்து தாய்நாட்டு பற்றுடன் வாழுங்கள்.

முருகப்பெருமான் எனது வழிபாடுதான் உங்களை காக்கும் என்றே உறுதியிட்டு சொல்லி மக்களை தூயநெறி நடத்தும் துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகாதேசிகனார் சொல்லும் மரணமிலாப் பெருவாழ்வை பெறும் ஞானக்கொள்கைகளை பின்பற்றிடவும், தானதருமங்களை தவறாது செய்து வந்தும் செயல்பட, தமிழக அரசியலில் தக்க பாதுகாப்பும் சிக்கல் இல்லாத செயல்பாடுகளும் உருவாகி தமிழகமே முருகப்பெருமானின் ஞானஆட்சியாக மலர்ந்து எங்கும் எதிலும் எல்லோர்க்கும் நலமும் வளமும் அளிக்கும் அற்புதமான இன்பமான வளமான வாழ்வை தமிழக மக்கள் வாழ்வார்கள்.

அரசினால் மக்கள் பாதுகாக்கப்படுவது உறுதியாகும். மரபு வழி வரும் தமிழ் கலாச்சாரங்கள் அரசு செய்பவர்களால் பாதுகாக்கப்பட்டு உலகமே வியக்கும் வண்ணம் தமிழகம் பெருமை உடையதாக மாறி தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கும் சூழல் உண்டாகுமப்பா முருகப்பெருமான் எனது அருள் துணையாலும், எம் ஞானபடையாம் ஞானிகள் துணையாலும் என கூறுகிறார் சர்வ வல்லமைமிக்க ஞானபண்டிதன் முருகப்பெருமான் தமது அருட்சுவடி மூலமாக.

–சுபம்–

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க அன்பர்கள் பல நல்ல செயல்களுக்கு துணை நிற்க வேண்டும். இந்த சங்கத்தின் கொள்கை இதுவே.**

பணிவு காட்டுதல்,

இனிமையாகப் பேசுதல்,

வஞ்ச மனப்பான்மை இல்லாதிருத்தல்,

பிறரை மதிக்கக் கற்றுக் கொள்ளுதல்,

ஜாதி, மத துவேசம் இல்லாதிருத்தல்,

எல்லோருக்கும் உணவு தருதல்.

தினசரி காலை மாலை தவறாது ஞானியர்களை பூஜித்தல்.

உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்தல்.

ஜீவகாருண்யத்தை கடைப்பிடித்தல்.

தொடர் . . .

திருச்சி மாவட்டம், துறையூர்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகாதேசிக சுவாமிகள்** அவர்கள்

## மகான் ஔவையாரின் ஆத்திசூடிக்கு அருளிய அருளுரை

## 71. நூல்பல கல்

(கற்க வேண்டிய அரிய நூல்கள் பலவற்றையும் கற்க வேண்டும்)

ஒரு மனிதன் தனது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ளவும், வாழ்வை வாழவும், அறிவை வளர்க்கவும் அவசியமாய் இருப்பது நமக்கு முன் வாழ்ந்த பெரியோரும், சமூகத்தினரும், ஞானிகளும், கலைஞர்களும் எழுதி வைத்த நூல்களே ஆகும். அவை அவரவர் அனுபவங்களையும், நடைமுறைகளையும், செயல்பாடுகளையும், கணக்கீடுகளையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் உபதேசங்களையும், வழிமுறைகளையும், இலக்கணம், கதை, கவிதை, கட்டுரைகளாகவும் அமைத்துள்ளனர். மருத்துவம், பொருளாதாரம், புவியியல், வரலாறு, கணிதம், சமூகம் என பல பிரிவுகளாயும் உள்ளன, தொழில்நுட்பம், விஞ்ஞானம் போன்ற நூல்களாகவும் உள்ளன. ஆக உலகினில் எத்தனையோ நூல்கள் இதுவரை இருக்கின்றது, இனியும் தோன்றும். இவை அனைத்தையும் இரண்டு வகைகளாக பிரிக்கலாம்.

1. இக வாழ்வாகிய உலகியல் வாழ்வை வாழ்வதற்கு தேவையான அறிவைக் கொடுக்கும் நூல்களும், வாழ்வை வாழ வழிமுறை கூறும் நூல்களையும் இகவாழ்வியல் நூல்கள் எனலாம்.

2. பரவாழ்வாகிய இறைவனையும், ஆன்மாவையும், உடம்பின் ரகசியத்தையும், பக்தி நெறியையும், யோக நெறியையும் பற்றி விளக்குகின்ற பரவாழ்வியல், அதாவது துறவியல் நூல்களாகும்.

உலகியல் வாழ்வை வாழ தேவையான பொருளை ஈட்டுவதற்கும், உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை உருவாக்குதல், காத்தல் போன்றவற்றை கூறும் நூல்களும், சமூக வாழ்க்கைக்கு தேவையான சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற நூல்களும் நமது இக வாழ்வாகிய இல்லறம், சமூகம், அரசு, கண்டுபிடிப்புகள், வாழ்வியல் முறைகள், உணவு முறைகள், மருத்துவம், வேளாண்மை, பொறியியல் போன்றவைகளை குறித்து கூறும் நூல்கள் பல்லாயிரம் இருக்கின்றன. அவற்றை எல்லாவற்றையும் கற்க முடியாது. அவரவர் தேவைக்கு ஏற்ப அவரவர் தொழிலிற்கு ஏற்ப நோக்கத்தின் அடிப்படையில், வாழ்வின், சமுதாயத்தின் அடிப்படையில் அவற்றை கற்பதும் அவற்றின் மூலம் உலகியல் அறிவை பெற்று வாழ்வதும் அவசியம். ஆயினும் அது இந்த உலகியல் வாழ்வை வாழமட்டுமே உதவும். அது இந்த பிறவியில் கற்றால், அது

இந்த பிறவிக்கு மட்டுமே பயன்படும், ஞாபக அறிவைச் சார்ந்த நூல்களாகும். அந்த அறிவு எப்போது வேண்டுமானாலும் நம்மை விட்டு நீங்கும் அல்லது உயிர் பிரிந்தால் அதுவரை அவர் கற்ற மொத்த கல்வியையும் ஒரு நொடிப்பொழுதில் வீணாகி அழியும் உடம்புடன் அறிவும் அழிந்துவிடும். ஆக இகவாழ்வியல் கல்வியில் ஒருவன் எவ்வளவுதான் கற்றுத் தேர்ந்தாலும் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் அது மனித வாழ்வை பொறுத்தவரை அந்த அறிவு தற்காலிகமானதே என்பதை அறிக. இவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

**– திருக்குறள் – கல்வி – குறள் எண் 398.**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி (ஞானக்கல்வி) ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒருவன் ஒரு ஜென்மத்தில் சாகாக்கல்வி கற்றிருந்தால் அவன் கற்ற சாகாக்கல்வி அடுத்தடுத்து வரும் தொடர் பிறவிகளுக்கும் பாதுகாப்பாய் இருக்கும்.

பரவாழ்வாகிய மோட்சகதியை அடைவதற்காக உண்டாக்கப்பட்ட நூல்களே பரவாழ்வியல் அல்லது துறவியல் நூல்களாகும். அவை அவரவர் தன்மைக்கு ஏற்ப அவரவரையும் கடைத்தேற்றும் பொருட்டு ஞானிகளாலும், சித்தர் பெருமக்களாலும், முனிவர்களாலும், ரிஷிகளாலும் உருவாக்கப்பட்டவைகளாகும். அவை ஒருபோதும் நமக்கு தாழ்வினை தருவதில்லை. அவை மனிதனை நெறிக்கு உட்பட்ட வாழ்வை வாழச்செய்து, பாவபுண்ணியங்களை அறியச் செய்து, பாவத்தை நீக்கி புண்ணியங்களை செய்ய செய்து, பக்தி உணர்வை தூண்டி கடவுள் நம்பிக்கையை வளர்த்து கடவுளின் தன்மைகளை, பெருமைகளை எடுத்துக் கூறி நம்மை பக்தி நெறிக்கும், யோகநெறிக்கும், ஞானநெறிக்கும் உட்படுத்தி நாம் இந்த ஜென்மத்தில் மட்டுமில்லாது இனிவரும் பிறவிகளிலும் பக்தியிலும், யோகத்திலும், ஞானத்திலும் செல்ல ஏதுவான அழியாத அறிவை ஆன்மாவில் பதியும் உண்மை அறிவைத் தருகின்ற அற்புதமான நூல்களாகும். ஞானவழித் துறையிலே வேத ஆகம நூல்கள் புராண நூல்கள் காவியங்கள் என்பன இறைவனது பெருமைகளை கூறும் பக்தி நெறிகளை கூறுகின்ற நூல்களும் தேவாரம், திருஅருட்பா, திருவாசகம் போன்ற பல தோத்திர நூல்களும் திருமந்திரம், சிவஞானபோதம் போன்ற சாஸ்திர நூல்களும் இன்னும் பலபல ஞானிகள் இயற்றிய அருட்கவிகளும் அருட்பாடல்களும் திருக்குறள் போன்ற அற நூல்களும் ஞானவழித்துறை நூல்களாகும்.

இவற்றினுள் வேதம், ஆகமம், புராணம் ராமாயணம், மகாபாரதம் போன்றவை முனிவர்களால் இயற்றப்பட்டதே ஆயினும் இவை மக்களிடையே

அறநெறிகளை வளர்த்து மக்களை நன்னெறிப்படுத்தி நல்வாழ்வை வாழவைக்கும். மேலும் ஞானிகள் இயற்றிய பக்தி நூல்கள் மக்களிடையே கடவுள் உண்டென்று நம்புவதும், அவனே நம்மை வழிநடத்துகிறான் என நம்புவதையும், பாவபுண்ணியங்களை வலியுறுத்தியும் கூறுகின்ற பக்தி நூல்கள் கடவுளின்பால் பக்தி கொள்ளச் செய்து படிப்போர் தம்மை பக்தர்களாக்கி பக்தி நெறியில் செல்ல செய்வதான திருஅருட்பா, திருவாசகம், தேவாரம் போன்ற தோத்திர நூல்கள் இறைவனது பெருமையை ஓங்கி உரைத்தும், அவனே தலைவன் என்பதும் இறைவனது திருவடிப் பெருமைகளையும் ஞானிகளது அனுபவங்களையும், அவர்கள் அடைந்த வெற்றிப் பாதையின் வழிகளையும், இறைவன் திருவடிகளை பற்றிட உகந்த பக்திமார்க்கத்தையும், பாவபுண்ணியங்களையும் கூறி இறைவனை அடைய மக்களை தூண்டும் தோத்திர நூல்களாகும். இவற்றினில் போய் இறைவன் யார்? எப்படிப்பட்டவர்? நாம் யார்? நமக்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு? கடவுள் என்றால் என்ன? கடவுளை அடைவது எப்படி? கடவுளாவது எப்படி? நமது பிறவி, பிறவிப் பெரும் பயன் என்ன? பிறவியின் நோக்கம்? பிறப்பு இறப்பு பற்றி அறிவுறுத்தல், தொடர் பிறவியை எப்படி ஒழிப்பது? அதற்கு என்ன வழி? மரணமிலாப் பெருவாழ்வு பெறுவது எப்படி? உடம்பு என்பது என்ன? உடம்பினால் உள்ள பயன் என்ன? உடம்பும் உயிரும் எதற்கு? உடம்பினால் உயிரினால் குருவின் துணைகொண்டு கடவுள் நிலை அடைவது எப்படி? குரு யார்? குருவின் தன்மை, குருபாரம்பரியத்தின் மகிமை என உண்மை ஆன்மீகத்தின் உட்பொருளை உள்ளது உள்ளவாறு விளக்கி கூறுவதும், ஆனால் ரகசியமான உட்பொருளை உடையதுமாய் அமைந்துள்ள திருமந்திரம், சிவஞானபோதம், ஔவைக்குறள், விநாயகர் அகவல், திருப்புகழ் போன்ற நூல்களும், நெறி நூல்களானதும், அறநூல்களாயும் உள்ள திருக்குறள், ஆத்திசூடி, நன்னெறி இன்னும் உள்ள அநேகம் அநேகம் நூல்களும் ஞானத்துறைக்காக ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கையும் ஒருங்கே சொல்லும் திருக்குறளும், அறம், பொருள், வீடுபேறு ஆகியவற்றையும் யோகநெறியும், ஞானநெறியும், குருநெறியும் கூறி மனிதனை கடவுளாக்கும் வழிமுறை சொல்லும் திருமந்திரம், எளிய பாடல்களாய் இருப்பினும் உட்பொருளை உணரமுடியாத வகையிலே இரும்பு பெட்டகம் போல கருத்துகளை ஒரு லட்சம் பாடல்களின் கருத்தை பன்னிரண்டு பாடல்களில் அழுத்தி இருத்தி கூறிய சிவஞானபோதமும், ஞானம் உரைக்கும் மகான் ஔவையின் ஔவைக்குறளும் முக்கியமான நூல்களும் சிறப்பானவை.

இதைத்தவிர கடவுள் என்பவர் யார்? அவன் எப்படிப்பட்டவன்? எப்படி உதயமானான்? அவன் யார்? அவனே முதல் ஞானி. அவனே மூலத்தலைவன்.

அவனே ஞானத்தலைவன். அவனே ஞானபண்டிதன், முருகப்பெருமான் என்பதை வலியுறுத்தி சொல்லிய தோத்திர சாஸ்திர நூலான திருப்புகழும், முருகனே முக்திக்கு வித்தான மூலவன் என்பதை வலியுறுத்தும் திருப்புகழின் உள் நூலான கந்தர் அலங்காரமும், மயில்விருத்தமும், வேல்விருத்தமும் என இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

மகான் மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞானபோதம் பெரும் ஞான நூலாகும். பெரும் ரகசியங்கள் உடைய நூலாகும். ஆனால் பார்ப்பதற்கு எளிமையாக இருக்கும். ஆனால் யாராலும் பொருள் சொல்ல முடியாது, யாரை கேட்க வேண்டும். மகான் மெய்கண்டதேவர் திருவடிகளை வணங்கி உணர்த்த சொன்னால் பொருள் புரியும்.

சரி திருமந்திரம் புரியுமா? புரியாது. மகான் திருமூலர் திருவடியை வணங்கி பூஜித்தால் திருமந்திரம் புரியும். இப்படி நூல்களை இயற்றிய ஞானிகள் திருவடிகளை பற்றி பூஜித்தால்தான் ஞானநூல்களின் பொருளே நமக்கு புரியும்.

நூல்பல கற்று என்ன பயன்? ஞானநூல்களையும், யோக நூல்களையும், ஞானிகள் தமக்கு பின்வரும் ஞானிகளுக்காக, ஞானம் மேற்கொள்ளும் ஞான சாதகனுக்கான வழி நூல்களாக இயற்றியவைகளாகும். சித்தர் பெருமக்களும் இவ்விதமே செய்துள்ளார்கள். அதைப் படித்து நாம் பயிற்சி செய்தால் வெற்றி பெற முடியுமா? என்றால் முடியாது, வெறும் கவி படித்தும், நூலறிவும் வைத்து ஒன்றும் செய்ய முடியாது.

**காட்டுங் குறியும் கடந்தவக் காரணம்**
**ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்**
**கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது**
**ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.**

**– திருமந்திரம் – மோன சமாதி – கவி எண் 2937.**

என மகான் திருமூலர் கூறுகிறார். ஆக எவர் ஞானம் உரைத்தாரோ அவர் திருவடி பற்றினால் அன்றி ஞானத்துறையில் ஒருபோதும் முன்னேற முடியாது. ஆக இதற்கெல்லாம் மூலமாய் உள்ள முருகப்பெருமான் திருவடிகளையும், மகான் அகத்தீசன் திருவடிகளையும், மகான் நந்தீசர் திருவடிகளையும், மகான் திருமூலர் திருவடிகளையும், மகான் கருவூர்தேவர் திருவடிகளையும், மகான் மாணிக்கவாசகர் திருவடிகளையும், மகான் மெய்கண்டதேவர் திருவடிகளையும், மகான் ஔவையார் திருவடிகளையும், மகான் திருநாவுக்கரசர் திருவடிகளையும், மகான் சுந்தரர் திருவடிகளையும், மகான் திருவள்ளுவர் திருவடிகளையும், மகான் அருணகிரிநாதர் திருவடிகளையும், மகான் ராமலிங்க சுவாமிகள் திருவடிகளையும் மனம் உருகி பற்றி வணங்க வணங்க, எல்லா

ஞானநூல்களையும் கற்பதினால் வரும் ஞானஅறிவினை நம்முள் அவர்கள் உணர்த்துவதோடு ஞானத்துறையிலும் நம்மை அழைத்து செல்வார்கள்.

இவையெல்லாம் தக்க சற்குரு துணையில்லாமல் செய்ய முடியாது. இந்த ஞானபரம்பரையே ஆதிமூலகுரு சுப்பிரமணியராகிய முருகப்பெருமான் முதல் அரங்கர் வரை குருபாரம்பரியமாகத்தான் வந்துள்ளது. ஆக குருவின் திருவடி பணிந்திட்டாலே எல்லாம் கைகூடும் என்பது தெளிவு.

ஆக ஒருவன் நூல்களை கற்பது அவசியம். அதிலும் வீண்ஆரவார நூல்களை கற்காமல் பிறவித்துன்பத்தை ஒழிக்கும் மார்க்கம் உரைக்கும் ஞானநூல்களை கற்பதும், ஞானநூல் ஆசான்களை வணங்குவதும் வேண்டும் என்பதைத்தான் மகான் ஔவையார் நூல் பல கல் என உரைக்கின்றார்.

நூல் பல கற்க வேண்டும் என்பது அறிவுரை, கற்றாலும் கற்க வேண்டியதை கற்க வேண்டும். கற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென்பதே மகான் ஔவையாரின் விருப்பமாகும்.

அறம் பொருள் இன்பம் வீடுபேறு அறிய
திறம்பட திருக்குறள் கற்றிடல் நலமே.

முனிவன் வள்ளுவன் மொழிந்த குறளை
கனிவுடன் கற்றிட காண்பார் வீடே.

------

# துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

# பிற இதழ்களில் அரங்கரின் செய்திகள்

திருச்சி மாவட்டம், துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் சார்பாக ஞானிகள் அருளிய அருட்சுவடிகள், செய்திகள் மற்றும் அரங்கரின் அருளுரைகள், **குமுதம் பக்தி ஸ்பெஷல், சக்தி விகடன், ராஜகோபுரம், தீபம், தினகரன் ஆன்மிகப் பலன், ஓம் சரவண பவ, ஜோதிட வித்யா, தசாபுத்தி மற்றும் கல்கண்டு வார இதழ்களிலும், தினமணி நாளிதழில் தினமணி கதிரிலும்** தொடர்ந்து வெளிவருகிறது. நமது சங்க உறுப்பினர்களும் தொண்டர்களும் ஆதரவாளர்களும் மற்றும் பொதுமக்களும் படித்து பயனடைய வேண்டுகிறோம்.

மேற்கண்ட அனைத்து செய்திகளும் உலக நன்மைக்காகவும், உலக மாற்றத்திற்காகவும் வெளிவரும் பயனுள்ள செய்திகள் என்பதால் அன்பர்கள் படித்து பயனடையும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்.**

ஓங்காரக்குடில், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் ஆசானின் செய்திகள் அருளுரைகள்
போன்றவை ஒலி, ஒளி வடிவில்

https://www.facebook.com/sriagathiarsanmargasangam.ongarakudil

https://www.youtube.com/user/agathiarsangam

https://plus.google.com/ +sriagathiarsanmaargasangamongarakudilthuraiyur/posts

என்ற சமூக வலைத்தளங்களிலும்
www.agathiar.org
என்ற எங்களது இணையதளத்திலும் காணலாம்.

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு

**R.சுரேஷ்** – 94434 21935

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் - இரா.மாதவன்

## அன்னை மருத்துவமனை,

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 40 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| **A/C NO** | : | **911010045586268** |
| **Bank** | : | **Axis Bank** |
| **Branch** | : | **Thuraiyur.621010** |
| **IFS Code** | : | **UTIB0001272** |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184.
www.agathiar.org

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :
04327 255184, 255834, 91503 75562.

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.

செல் - 90950 33311 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவுக்காக ரூ50/- சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை

DD - வரைவோலை

MO - பணவிடை

NET BANK - இணைய தளம் மூலம் பணம் பரிமாற்றம்

....................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at “Thuraiyur” or “Tiruchirapalli”**

மேலும் ஞானத்திருவடி சந்தா மற்றும் புதுப்பித்தலுக்கும் புத்தகங்களை பெறவும் கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

♦ பணம் அனுப்பிய பின்பு விபரங்களை **90950 33311** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு உடனே தெரியப்படுத்தவும்.

♦ தபாலில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பல்ல.

♦ எங்களுக்கு தங்களுடைய தொகை கிடைத்த ஒரு வாரத்தில் புத்தகங்கள் கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

♦ ஞானத்திருவடி சந்தா அனுப்பிய மாதத்தின் அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் தங்களுக்கு புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

♦ பிரதி மாதம் 15ஆம் தேதிக்குள் ஞானத்திருவடி கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள - **96591 33377**.

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

பரத்தினில் பரமே பரத்தின்மேற்பரமே
பரத்தினுள் பரமே பரம்பரம் பரமே
பரம்பெறும் பரமே பரம்தரும் பரமே
பரம்பதம் பரமே பரம் சிதம்பரமே
பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே
பரஞ்சுக பரமே பரம்சிவ பரமே
பரங்கொள் சிற்பரமே பரஞ்செய் தற்பரமே
தரங்கொள் பொற்பரமே தனிப்பெரும்பரமே
வரம்பரா பரமே வணம்பரா பரமே
பரம்பரா பரமே பதம்பரா பரமே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 20/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாயைம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கொளத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**
அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **காலை 11-12.30** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்
S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,
113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.
ஆசிரியர் – இரா.மாதவன்.
அச்சிட்டோர் :
இராம.தொல்காப்பியன்,
வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

**சந்தாப் படிவம்**

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________

முகவரி : ______________________

______________________

ஊர் : ______________ பின்கோடு ______________

வட்டம் : ______________ மாவட்டம் ______________

தொலைபேசி : ______________ (கைபேசி) ______________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்